# கல்வெட்டு

## KALVETTU

திருவள்ளுவராண்டு 2037 (பார்த்திப ஆண்டு) தைத்திங்கள்



தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் அலங்கார ஊர்தி
26-01-2006 குடியரசுதின அணிவகுப்பு

கல்வெட்டு காலாண்டிதழ் : 69 (ஜனவரி 2006) விலை ரூ.10.00
தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை




ஆண்டிப்பட்டி, மோதூர் அகழாய்வு அறிக்கை நூல்கள் வெளியீடு. துறைச்செயலர் திரு.இராமையா இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் சென்னைப் பல்கலைப் பேராசிரியர் திரு.ஏகாம்பரநாதன் ஆகியோர்.

நாள் 09.12.2005 சென்னை.



மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு, 'அழகர் கோயில் ஓர் ஆய்வு' நூல்கள் வெளியீடு. சிறப்பு ஆணையர் மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.து.இராசேந்திரன் இ.ஆ.ப., இந்து அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையர் திரு. போ. ராமராஜு ஆகியோர்.

நாள் 04.02.2006 மதுரை.



'பூண்டி அகழ்வைப்பகம் கையேடு' வெளியீடு: சிறப்பு ஆணையர் மற்றும் திருவள்ளூர் ஆட்சியர் திரு. பஞ்கஜ் குமார் இ.ஆ.ப.,

நாள் 14.02.2006 திருவள்ளூர்

## நூல்கள் வெளியீட்டிலும் விற்பனையிலும் சாதனை

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை 2005-2006ஆம் ஆண்டில் 25 நூல்கள் வெளியிட்டுள்ளது. தலைமையிடத்தில் விற்பனை ரூ.47,949/- இது சென்ற ஆண்டைவிட மூன்று மடங்காகும்

2004-05 - ரூ. 16,243/- 2005-06 - ரூ.47,949.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை.

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஹால்ஸ் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.
15-3-2006

# பதிப்புரை

கல்வெட்டு காலாண்டிதழ் - 69, நீர்ப்பாசனச் சிறப்பிதழாக வெளி வருகிறது. கல்வெட்டுகள் மற்றும் இலக்கியக் குறிப்புகளின் துணை கொண்டு பழந்தமிழகத்தில் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டமை, நீர் மேலாண்மை தொடர்பான செய்திகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன.

பாண்டியநாட்டு நீர்ப்பாசனச் செய்திகள்; பல்லவர் கால நீர்ப் பாசனச் செய்திகள்; திருவில்லிப்புத்தூர் பராங்குசப் பேரேரி பற்றிய செய்தி; நெல்லை மாவட்ட மனோமயப் பேரேரி, பற்றிய செய்தி; குமரி மாவட்ட நீர்ப்பாசன வசதிகள்; அம்பாசமுத்திரம் குளக்கல்வெட்டு, கோட்டரப்பட்டி வாய்க்கால் கல்வெட்டு; பழங்கோயில் கல்வெட்டுக் காட்டும் நீர்ப்பாசனச் செய்தி என பண்டைத் தமிழக நீர்ப்பாசனச் செய்திகளைப் படம் பிடித்துக் காட்டும் கட்டுரைகள் இவ்விதழில் சேர்க்கப்பட்டுள்ளன,

கடந்த மூன்று திங்கள்களில் கண்டறியப்பட்ட புதிய செய்திகளாகச் சமணச்சிற்பங்கள், சமணப்படுக்கைகள், பெருங்கற்சின்னங்கள், பாடல் கல்வெட்டுகள் என சுவையான செய்திகளும் இவ்விதழை அணி செய்கின்றன.

செய்திக் குறிப்புகளாக அரசு செயலர் கலந்து கொண்ட சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி; சிறப்பு ஆணையர் கலந்து கொண்ட கருத்தரங்க நிகழ்ச்சிகள்; கண்காட்சிகள்; நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகள், குடியரசு தினத்தன்று நிகழ்ந்த துறையின் அலங்காரக்காட்சி ஊர்தியின் அணி வகுப்புச் செய்தி ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

கருத்துச் செறிவுமிக்க இவ்விதழ் சிறந்த ஆய்விதழாக அமைந்து உள்ளது. வழக்கம்போல் வரலாற்று ஆர்வலர்கள் இவ்விதழை வரவேற்பார்கள் என நம்புகின்றேன்.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**, இ.ஆ.ப.,
பதிப்பாசிரியர்

உள்ளே . . . **பக்கம்**


1. *நீரின்றி அமையாது உலகு*
— **பொ. இராசேந்திரன்** 1

2. *பல்லவர் காலத்தில் நீர்ப்பாசனம்*
— **சொ. சாந்தலிங்கம்** 6

3. *ஸ்ரீவில்லிபுத்தூர் பராங்குசப்பேரேரி*
— **வெ. வேதாசலம்** 10

4. *குமரிமாவட்ட நீர்ப்பாசன கல்வெட்டுக்கள்*
— **தே. கோபாலன்** 15

5. *மனோமயன் ஏரியும் பராமரிப்பும்*
— *முனைவர்.* **மா. செந்தில்செல்வக்குமரன்** 19

6. *பழங்கோயில் கல்வெட்டு காட்டும் நீர்ப்பாசனமும் வேளாண்மையும்*
— **மு. ஆ. ப. சரஸ்வதி** 21

*கோட்டரப்பட்டி கல்வெட்டு*
— **கி. ஸ்ரீதரன்** 24

7. *அம்பாசமுத்திரத்துப் பூவங்குளம்*
— **சொ. சந்திரவாணன்** 25

8. Conservation Documentation & Digitisation in the Department of Archaeology
— **T. S. Sridhar,** I.A.S., 27

9. *துறையின் சிறப்பு நிகழ்வுகள்* 33

10. *துறையின் கண்டுபிடிப்புக்கள்* 38


கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

# 1 நீரின்றி அமையாது உலகு

**பொ. இராசேந்திரன்,**
*சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர், மதுரை.*

நீரில்லாமல் விளைவில்லை; விளைவில்லாமல் உலக இயல்பு இல்லை; எனவேதான், நீரின்றமையா துலகென்றார்[1] வள்ளுவர். உண்பார்க்கு நல்ல உணவுகளை உளவாக்கி, அவற்றை உண்பார்க்குத் தானும் உணவாய் நிற்கும் நீரின் சிறப்பை உணர்த்தவே, ''உணவெனப்படுவ நிலத்தொடு நீரே''[2] என்று புறநானூறும் புகல்கின்றது.

சங்கப்புலவர் குடபுலவியனார், நிலம் பள்ளமான இடத்தில் நீரைக்கட்டி மன்னன் தன் பெயரை நிலைத்து நிற்கச் செய்ய வேண்டுமெனப்[3] பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தியுள்ளதின் மூலம் நீர் நிலைகளை உருவாக்கி வேளாண்மையை வளப்படுத்திக் குடிதழிஇக் கோலோச்ச வேண்டியது வேந்தரின் கடமை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். வேந்தர்களும் இக்கடமையை உணர்ந்து செயல்பட்டதன் காரண மாகவே, திரையனேரி, மகேந்திரத் தடாகம், சித்திர மேகத்தடாகம், வயிரமேகத் தடாகம், பரமேசுவரத் தடாகம், சோழவாரிதிஏரி, வீர நாராயணன் ஏரி, கலியனேரி, கண்டராதித்தப் பேரேரி, செம்பியன் மாதேவிப் பேரேரி, சுந்தரசோழப் பேரேரி, குந்தவைப் பேரேரி, மதுராந்தகப் பேரேரி, சோழகங்கப் பேரேரி, இராஜேந்திர சோழப்பேரேரி, குலோத்துங்கசோழப் பேரேரி, வீரசோழ வடவாறு, மதுராந்தக வடவாறு, மண்ணியாறு, முடிகொண்டான் ஆறு, வீரசோழன் ஆறு, விக்கிரம ஆறு, பராக்கிரமபாண்டியன் பேராறு, வீரபாண்டியன் கால், ஸ்ரீவல்லபப் பேராறு, வாசுதேவப் பேராறு, தியாகன் சிறிய பேராறு, கிழவனேரி, புள்ளனேரி, கலியனேரி என்று பல நீர்ப்பாசனத்திட்டங்கள் அரசர்களின் பெயர்களாலும், அரசர்க்கு அடுத்த நிலையிலிருந்த உயரதிகாரிகளின் பெயராலும் உருவாயின எனலாம். பாண்டிய மன்னன் சடையவர்மன் பராந்தக வீர நாராயணின் தளவாய்புரச் செப்பேடு பாண்டியன் ஆறு பலதலை கண்டது குறித்தும், குறிப்பிட்டுள்ளமையும், ஈண்டு கவனத்திற்குரியது.

பரந்து விரிந்த பாண்டிய நாட்டுப் பகுதிக்குள் வைகை, உப்பாறு, குண்டாறு, சுருளியாறு, வெள்ளாறு, விரிசுளியாறு, தாமிரபரணி என ஆறுகள் குறைவான எண்ணிக்கையிலுள்ளதால், எண்ணிறந்த

தடாகங்களை உருவாக்க வேண்டிய இன்றியமையாத தேவை பாண்டியருக்கிருந்தது. இதனால்தான் பாண்டிய நாட்டுப் பகுதிக்குள் மாடக்குளம் கண்மாய், அனுப்பானடிக் கண்மாய், தேனூர்க் கண்மாய், அவனியாபுரம் கண்மாய், மாறனூர் பெருங்குளம், இருப்பைக்குடி வள்ளைக்குளம், கொழூவூர் அரசங்குளம், நெல்மலி பெருங்குளம், சிறுபுத்தூர் பாழிக்குளம், சாத்தனூர்ப் பெருங்குளம், உலகளந்த சோழப் பேரேரிக்குளம், சூரகண்டன் குளம், திருவாதவூர் குளம், தச்சன்குடி குளம், பள்ளிக் குறிச்சிக்குளம், காரிகுழிக்குளம், திருவரத்தூர் குளம், ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள பராங்குசப் புத்தூர் பெருங்குளம் எனப் பல குளங்கள் காணப்படுகின்றன. இங்ஙனம் பாண்டிய நாட்டுப் பகுதியில் குளங்கள் தனிச்சிறப்புப் பெற்றுத் திகழ்ந்ததால்தான், பாண்டிய நாட்டிலிருந்த நாட்டுப்பிரிவுகளில், மாடக்குளக்கீழ், வேலூர்க் குளக்கீழ், குன்றத்தூர்க் குளக்கீழ், இராஜசிங்கப் பெருங்குளக்கீழ், வீரநாரணக்குளக்கீழ் என நீர்பாசனக் குளங்களின் பெயரால் நாட்டுப்பிரிவுகளிருந்துள்ளன.

ஏரி, குளம், போன்றே இலஞ்சி, கயம், கேணி, கோட்டகம், மடு, ஓடை, வாவி, சலந்தரம், வட்டம், குட்டம், கிடங்கு, சுனை, குண்டு, ஊருணி, ஏந்தல், கண்மாய் போன்றவையும், வேளாண் வளர்ச்சிக்கு உதவிடும் நீர்ப்பாசன அமைப்புகளாகக் காணப் படுகின்றன.

''பெருங்குளக் காவலன் போல அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே'' என்னும் அகநானூற்று வரிகளால் சங்க காலத்தி லிருந்தே குளங்கள் முறையாகக் காக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது. குளங்களில் தேக்கப்படும் நீரை முறைப்படுத்தித் திறந்துவிட்டு வேளாண்மைக்கு உரியமுறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக மதகு, மடை, தூம்பு, குமுளி, புதவம், கலிங்கு போன்ற அமைப்புகள் ஏரி, குளங்களில் ஏற்படுத்தப்பட்டன. 'பொய்கை வாயிற் புனல் பொருள் புதவின்'[5] என்ற பதிற்றுப்பத்து வரியிலி ருந்தும், ''வையை உடைத்த மடை அடைத்த கண்ணும்''[6] ''நுரையுடன் மதகு தொரு இழிதரு புனல்''[7] ''சுருங்கையின் ஆயத்தார் சுற்றும் எறிந்து''[8] போன்ற பரிபாடல் வரிகளிலிருந்தும், ''குமிழி சுழலும் துணை செலல் தலைவாய்''[9] என்று மலைபடுகடாம் மொழிவதிலிருந்தும், 'பெருங்குள மடைநீர்'[10] என்று நற்றிணை நவில்வதிலிருந்தும், ''புனல் பொரு புதவி னுறந்தை''[11] என்று அகநாநூறு எடுத்துரைத்திருப்பதிலிருந்தும் சங்ககாலத்திலிருந்தே புதவு, மடை, மதகு, சுருங்கை, குமிழி, போன்ற அமைப்புகள்

செயல்பாட்டிலிருந்து வருவது தெளிவாகிறது. 'மடுப்பு' என்றால் 'அடைப்பு' என்று பொருள். இதனால், நீர் செல்லும் பாதையை அடைத்துத் திறந்துவிடும் அமைப்பிற்கு 'மடை' என்று பெயரேற்பட்டிருக்கலாம். 'மடுத்தல்' என்ற சொல்லுக்குச் செலுத்துதல், ஊட்டுதல் என்றும் கூடப் பொருளுண்டு. ஏரி, அல்லது குளத்து நீரை முறைப்படுத்தி விளைநிலங்களுக்குச் செலுத்தும் பணியினையும், விளைநிலங்களுக்கு ஏரி அல்லது குளத்து நீரை ஊட்டும் பணியினையும் செய்வதால் கூட, மடை, என்ற பெயரேற்பட்டிருக்கலாம். மடையானது, திறக்கப்பட்டதும் நீர் மட்ட அளவில் நீரை வெளியேற்றும் அமைப்புடையது. 'மதகு' என்பது திறக்கப்பட்டதும், வேண்டிய அளவு உயர்த்தியும், தாழ்த்தியும், நீரினைத் தேவையான அளவிற்கு வெளியேற்றக் கூடிய அமைப்புடையது. குமிழி என்பது நீர்மட்டத்திற்குக் கீழாகச் சிறுதுளை வழியாக நீரை ஏரி அல்லது குளத்தின் கரையைக் கடந்து வெளியேற்றி மீண்டும் மேலெழுந்து செல்லச் செய்யும் அமைப்புடையது. நீண்ட குழாய் மூலம் தண்ணீரை வெளியேற்றும் அமைப்பிற்குத் தூம்பு என்று பெயர்.[12] மடையின் அடிப்பகுதி பூமிக்குள் புதைத்து வைக்கும் அமைப்புடையதென்பதால் 'புதவு' என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

மதுரைக்கு வடகிழக்கில் மதுரையிலிருந்து 25 கி. மீ. தொலைவிலும், மேலூரிலிருந்து 10 கி. மீ தொலைவிலும், அமைந்துள்ள திருவாதவூரில், சிவாலயத்திற்கு வடக்கே ஒரு குளமுள்ளது. இவ்வூர்க் கல்வெட்டில் சுட்டப்படும் உலகளந்த சோழப்பேரேரியாக இதனைக் கருதலாம் இக்குளத்திலுள்ள மடைத்தூணில் காணப்படும் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலக் கல்வெட்டிலிருந்து,[18] (17-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1195) இம்மடை மங்கலக்கோன் பாஞ்சாலராஜன் என்பவரால் அமைக்கப்பட்டுள்ளமையும், அதனால் இம்மடைக்கு அவன் பெயரால் பாஞ்சாலராஜன் மடை என்ற பெயர் வழங்கி வந்தமையையும், தெரிந்து கொள்ள முடிகிறது. இக்கல்வெட்டின் நடுப்பகுதி அழகிய பாடல் வடிவிலமைந்துள்ளமையும் கண்டின்புறத்தக்கது.

இக்கல்வெட்டின் பாடற் பகுதி கீழ்வருமாறு:

"மங்கலக்கோன் பாஞ்சாலன் மாவேறி வண்டலர்த்
தொங்கல் வழுதி தாமெறிந்து - கொங்கலர்
தென்கூடல் பாணராதி யோர்தெந் மன்னரை
வென்றுபாட்டு யராலப்ப கோன்"

இம்மடையின் மடைத்தூணில் காணப்படும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 9-ஆம் ஆட்சியாண்டுக்

கல்வெட்டொன்றிலிருந்து, கி.பி. 1225 அளவில் இம்மடை மீண்டும் மதுரையிலிருந்த கைக்கோளன் செயமுடையான் விரத முடிச்சானான பராக்கிரம சிங்கதேவன் (விக்கிரம சிங்கதேவன்?) என்பவனால் அமைக்கப்பட்டுள்ளதையும், அதனைத் தொடர்ந்து அம்மடைக்கு 'விக்கிரம சிங்கதேவன் மடை' என்று பெயர் வழங்கிவந்ததையும் தெரிந்து கொள்ளமுடிகிறது.

மதுரை மேலூர் வட்டம் மேலவளவு பறம்புக் கண்மாய் பாறையிலுள்ள முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 21-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, ''பறம்பான திருநாராயண மங்கலத்து குளம் கரையும் வளர்த்து வயல் நீர்க்கு ஈடுபடாமற் பாறைமேலே நீருமேறக்கண்டு'' கோவூருடையான் ஆள்வான் சக்கரக்கையன் என்பவர் கரைகுலையாமற் கல்லும் படுப்பித்துக் கலிங்கும் நாட்டு வித்தமையைத் தெரிவிக்கிறது.[15] மதுரைக்கருகிலுள்ள ஆனைமலை நரசிங்கம் பாசனக்குளம், முதலாம் பராந்தகசோழனின் காலத்தில் அருள்நிதி கலியன் என்ற அதிகாரியால் திருத்தி விரிவாக்கம் செய்யப்பட்டது. இதனைக் கல்வெட்டு, 'இக்குளந்தான் வேண்டு மாறு கல்வி கரை நீளம் அட்டப்பெறுவதாகவும், இக்குளத்தின் நீர் தான் வேண்டுமளவும் கோக்க பெறுவதாகவும்'' என்று குறிப் பிடுகிறது.[16]

*மதுரையிலிருந்து திருவாதவூர் செல்லும் சாலையில் திருமோகூருக்கும், திருவாதவூருக்கு மிடையிலுள்ள (நல்லணி) ஆமூரிலுள்ள கண்மாயிலிருக்கும் மடையில் தேய்ந்த நிலையிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டிலிருத்து இம்மடை 9-10ஆம் நூற்றாண்டுக் குரியதென்பது தெளிவாகிறது.*

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் கொட்டாம்பட்டிக் கருகிலுள்ள சொக்கலிங்கபுரத்திலுள்ள கல்வெட்டுகளிலிருந்து அப்பகுதியில் வஞ்சியூர்க்குளம், அமுதனேரி, துறையூர்க் குளம், புரவேரிக்குளம் போன்ற குளங்களிருந்தமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இப்பகுதியில் ஏரியின் பெயரால் அறுநூற்றுவனேரி என்ற ஊர் இருந்ததையும் இவ்வூர்க் கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. கி. பி. 1279 அளவில், மேல்மலை ஊரவையினர், புரவேரிக் குளத்தினை அனுபவித்து வந்த ஒருவர், அதற்குரிய கடமை, குடிமை போன்ற வரிகளைச் செலுத்தாமல், இராஜதுரோகம், நாட்டுத்துரோகம், ஊர்த்துரோகம் செய்ததை அறிந்து அப்புரவேரிக் குளத்தினைச் சொக்கலிங்கபுரத்திலுள்ள அழகிய சோழீசுவரமுடையார்க்கு நிலவிலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்துள்ளனர்.

இங்ஙனம் காலம் தோறும் குளம் தொட்டுக் குளங்காத்து வளம் பெருக்கி வருவதால்தான் தமிழ்நாடு இன்றும் வேளாண் மையில் தனிச்சிறப்புடன் திகழ்ந்து வருகிறது.

அடிக்குறிப்பு

1. திருக்குறள், 20 (வான்சிறப்பு)
2. புறநானூறு, 18:21
3. நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
   தட்டோர் அம்ம இவண் தட்டாரே
   தள்ளாதோர் இவண் தள்ளாதோரே
   (புறநானூறு, 18: 28-30)
4. அகநானூறு, 252
5. பதிற்றுப்பத்து, 27
6. பரிபாடல் 6:28
7. பரிபாடல் 2:66
8. பரிபாடல் 16:26
9. மலைபடுகடாம், 474, 475
10. நற்றிணை, 340:3
11. அகநானூறு, 337:14
12. சு. இராசகோபால், "பண்டையத் தமிழக நீர்ப்பகிர்மான அமைப்புகள்" ஏரிகளில் பாரம்பரிய தொழில் நுட்பங்கள், தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர் & தானம் அறக்கட்டளை, மதுரை 2004 ப. 65
13. த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் 58/2003
14. த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் 59/2003
15. ARE 346/1985
16. வெ. வேதாசலம், "பண்டைய பாசனப் பராமரிப்பும் நிதி ஆதாரமும்," கண்மாய்/ஏரிகளில் பாரம்பரிய தொழில்நுட்பங்கள், தமிழகத் தொல்லியல்கழகம் & தானம் அறக்கட்டளை, 2004, பக். 132

# 2 பல்லவர் காலத்தில் நீர்ப்பாசனம்

சொ. சாந்தலிங்கம்
மதுரை.

புதிய நாடுகள் உருவான போது காடுகள் அழிக்கப்பட்டன. நாட்டு மக்களின் அடிப்படைத் தேவை நீர். எனவேதான் "காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கினர்"[1] சங்கத்தமிழ் மன்னர்கள். குளந்தொட்டுக் காவு பதித்து, வழிசீத்து உழுவயல் ஆக்கி, உண்ணீருமாய் உதவுங்கிணறு தோண்டுவது சுவர்க்கத்தை அடையும் வழி[2] என மக்கள் நம்பினர். இதே அடிப்படையில் பல்லவ மன்னர்கள் தங்கள் ஆட்சியின் தொடக்க காலத்தில் பல புதிய பிராமணர் குடியிருப்புகளை "பிரமதேயம்" என்னும் பெயரால் ஏற்படுத்தினர். தங்களது ஆயுள் விருத்திக்காகவும், உடல் நலனுக்காகவும், போர் வெற்றிக்காகவும், இத்தகைய கொண்டைகளை அந்தணர்களுக்கு அளித்தனர். அவ்வாறு கொடுத்த போது அவ்வூர்களுக்கு வேண்டிய நீர் ஆதாரங்களையும் அமைத்துக் கொடுத்தனர். எடுத்துக்காட்டாக முதலாம் பரமேசுவரவர்மனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 669-700) இருபது சதுர்வேதி பிராமணர்க்கு பரமேசுவரமங்கலம் என்னும் பெயரில் பிரமதேயமாக நிலங்கொடுத்தான். அத்தோடு அவ்வூரில் பரமேசுவர தடாகம் என்று ஒரு ஏரியை ஏற்படுத்திப் பாலாற்றிலிருந்து நீர் கொண்டு வர பெரும்பிடுகு கால் என்னும் கால்வாயையும் வெட்ட, அக்காலிலிருந்து தலைவாய், தலைப்பேழை, ஊற்றுக்கால் என்னும் கிளைகளையும் வெட்டிக் கொள்ள அனுமதி அளித்தான் பரமேசுவரன்.[3]

இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லன் உதய சந்திரமங்கலம் என்னும் பெயரில் 108 பிராமணர்களுக்குப் பிரமதேயமாக நிலம் கொடுத்தான். இக்கிராமத்தின் எல்லைப்புறங்களில் இருந்த ஸ்தோகநதி (சிற்றாறு) சக்கரதீர்த்தம், உரகஹ்ரதம் என்னும் (நாக தீர்த்தம்) குளம், சிந்துவர ஹ்ரதம் என்னும் மடு (சிறுகுட்டை) ஆகிய நீர் ஆதாரங்களையும் தடையின்றி அனுபவிக்க உரிமை அளித்தான் என்று உதயேந்திரம் செப்பேடு கூறுகின்றது. அக்கிராமத்தில் இருந்த இரண்டு ஜலயந்திரங்களையும் (ஏற்றங்கள்) பிராமணர் அனுபவிக்கலாம் எனவும் ஆணையிட்டான் அரசன்.[4]

இதே மன்னன் இன்னொரு வேதம் வல்ல பிராமணர்க்கு ஏகதீர மங்கலம் என்னும் பெயரில் ஒரு பிரமதேயம் அளித்ததைக் கசாக்குடிச் செப்பேடு கூறுகிறது.[5] இவ்வூர் நிலங்களுக்கு வேண்டிய நீரைச் செய்யாறு,

வெஃகா (வேகவதி) திரையனேரி என்னும் நீர்நிலைகளிலிருந்து ஆற்றுக்கால், வெள்ளக்கால் என்பவற்றை ஏற்படுத்திக் கொண்டு எடுத்துக் கொள்ளும் உரிமையையும் அளித்தான். அத்துடன் பிறர் இக்கால்வாய்களி லிருந்து கூடை மூலம் தண்ணீர் எடுத்தல், குற்றேத்தம் மூலம் நீர் எடுத்தல், குறங்கறுத்து(சிறுகால்) நீர் கொண்டு செல்லல் ஆகியவற்றைச் செய்யக்கூடாது எனத் தடையும் செய்தான். செய்தால் தண்டனையும் உண்டு என எச்சரித்தான்.

இம்மன்னனுடைய ஆட்சியிலேயே நயதீரமங்கலம் என்னும் பிராமண கிராமத்தை உருவாக்கி அதனை 108 பிராமணர்க்கு அளித்தான் இதிலும் இவர்கள் பெற்ற ஊருக்கு எல்லாவகையிலும் நீர் எடுத்துக் கொள்ளலாம் என்றும் பிராமணர் அல்லாத பிறர் எவ்விதத்திலும் அவர்கள் நீர் உரிமையில் குறுக்கிடக் கூடாது என்றும் தடை செய்தான்.[6] இச்செப்பேட்டில் நெசலப்பூண்டி ஏரி என்னும் பேரேரி ஒன்றும் கூறப்படுகிறது.

அபராஜிதவர்மன் திருத்தணி நாட்டில் மேலிருஞ்செறு சபையார்க்கு பிரமதேயமாய் நிலம் கொடுத்தான். அப்போதும் இந்நிலங்களுக்கு வேண்டிய அனைத்து நீர் ஆதாரங்களையும் அவர்கள் பெற்றுக் கொள்ள உரிமையளித்தான் என்பதைத் திருத்தணி செப்பேடு தெரிவிக்கிறது.[7]

## உத்திரமேரூர் வயிரமேகத்தடாகம்

உத்தரமேரூரின் ஜீவநாடியாக அமைந்தது ''வயிரமேகத்தடாகம்'' எனும் பேரேரியாகும். பல்லவ மன்னன் தந்திவர்மனுக்கு (கி.பி. 796-847) வயிரமேகன் என்று ஒரு சிறப்புப் பெயர் உண்டு. இப்பெயரால் அமைந்ததுவே வயிரமேகத்தடாகம் என்பர். ஆனால் தந்திவர்மனுக்கு முன்பாகவே வயிரமேகத்தடாகம் இருந்தது. இவ்வூரை நிர்வாகம் செய்வதற்கென கி.பி. 739 லேயே மகாசபை என்ற ஒரு அமைப்புச் செயல்பட்டுள்ளது.[8] இச்சபையின் கீழ் பலவாரியங்கள் வகுக்கப்பட்டுப் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் முதன் முதலாகக் கி.பி. 878ல் ஏரிவாரியம் என்னும் வாரியம் தான் செயல்பட்டது. பின் சோழர்காலத்தில்தான் தோட்ட வாரியம், பொன்வாரியம் எனப்பல வாரியங்கள் இயங்கின. வயிரமேகத் தடாகத்தின் உபரித்தண்ணீரை வெளியேற்றும் காலாக ''பரமேஸ்வரவதி''[9] என்னும் கால்வாய் அமைக்கப்பட்டது. ஸ்ரீதரவாய்க்கால், கணபதி வாய்க்கால் என்னும் இரண்டு வாய்க்கால்கள் தோண்டப்பட்டன. கம்பவர்மன் என்னும் பல்லவமன்னன் காலத்திலேயே இத்தகு வாய்க்கால்கள் இருந்தன.[10] வயிரமேகத்தடாகம் செய்யாற்றிலிருந்து நீர் கொணரப்பட்டு நிரப்பப் பட்டது.

### குழிகுத்துதல்

வயிரமேகத் தடாகத்தை ஆண்டுதோறும் குழி குத்திப் பராமரிப்பது (தூர் வாருவது) முறையாக செய்யப்பட்டது. இதற்கென வணிகர்களும், செல்வந்தர்களும் நன்கொடைகள் அளித்தனர். அவற்றை வைப்பு நிதியாகக் கொண்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டி மூலம் குழி குத்தப்பட்டது. கி.பி. 739 லேயே குழிகுத்தப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. சேட்டத்தரையன் தானவேந்தன் என்பவன் 20 கழஞ்சு பொன்னும் எருவிலையால் வந்த திரவியத்தையும் உத்திர மேரூர்ச் சபையாரிடம் கொடுத்து வயிரமேகத் தடாகத்தை குழிகுத்த ஏற்பாடு செய்தான்[11] தந்திவர்மனின் 7-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 803ல்) 5 பட்டி நிலத்தைக் கொடையாகப் பெற்ற பெருங்குறி சபையார் அதனைக் கொண்டு ஏரியைத் தோண்டிக் கரையை உயர்த்தினர்.[12]

கம்பவர்மனின் ஆட்சிக் காலத்தில் வயிரமேகத் தடாகம் அடிக்கடி குழிகுத்திப் பராமரிக்கப்பட்டது. இம்மன்னனின் 15-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 883ல்) இத்தடாகத்தைக் குழிகுத்துவதற்காகக் கழுக்குன்றன் எனும் வாணிகன் ஒருவன் 100 கழஞ்சு பொன்னும் 28 காடி நெல்லும் கொடையளித்தான்.[13] அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வணிகன் மண்ணிப்பாக்கிழான் என்பவன் இதே பணிக்காக 100 கழஞ்சு பொன் கொடை அளித்தான், மீண்டும் மூன்று ஆண்டுகள் கழித்து இதே பணிக்காக இதே வணிகன் மேலும் 100 கழஞ்சு பொன் கொடுத்தரன்[14] பொதுவாக ஆண்டுதோறும் தூர்வாரும் பணிமேற்கொள்ளப்புட்டுள்ளது என்பதை மாமல்லபுரம் அருகில் உள்ள பையனூர்க் கல்வெட்டு ஒன்றால் அடுகிறோம்.[15]

கி,பி, 550ல் சமணத்துறவி வஜ்ரநந்திக்கு பருத்திக் குன்றம் என்ற ஊரைப் பள்ளிச் சந்தமாக சிம்மவர்மன் கொடுத்தபோதே ஏந்தல் ஏரி, வேள்வடுகன் ஏரி, ஆகியவை இருந்துள்ளன. நீலபாடி வதி, மூலை ஏற்றம், முருக்கங்கேணி என்ற வேறு சில நீர் ஆதாரங்களும் இவ்வூரில் இருந்துள்ளன.[16] முதலாம் மகேந்திரவர்மனே பல்லவ மரபின் மிகப் புகழ் பெற்ற மன்னன். இவன் தன் பெயரால் மகேந்திரவாடி என்னும் ஊர் ஒன்றை ஏற்படுத்தி அங்கு மகேந்திர தடாகம் என்னும் ஏரி ஒன்றையும் தோற்றுவித்தான். இவ்வூர் தற்போது சோழீங்கர்க்குத் கிழக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.[17] கம்பவர்மனின் கல்வெட்டு ஒன்று தூசி-மாமண்டூர் என்னும் ஊரில் சித்திரமேகத் தடாகம் ஒன்று இருந்ததாகக் கூறுகிறது,[18] முதலாம் மகேந்திர வர்மனுக்குச் ''சித்திரக் காரப்புலி'' எனும் சிறப்புப் பெயர் ஒன்று உண்டு,

கோயில் கட்டுவதும். ஏரி தோண்டுவதும் முக்கியமான பணியாக நற்பலனைத் தரும் செயலாகக் கருதினர் மக்கள். காட்டுத்தும்பூரில் கி.பி. 563 லேயே கனகவல்லி ஏரி என்னும் பெயரில் ஒரு ஏரி

உருவாக்கப்பட்டது.[19] பெருமாள் கோயில் ஒன்றும் பின்னர் கட்டப் பட்டது. மல்லியங்கரணை ஏரி[20], (உத்திரமேரூருக்கு அருகில்) வெள்ளேரி, தும்பனேரி,[21] கர்வாதி ஏரி[22] எனப் பல ஏரிகள் பல்லவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன. காவிரிப்பாக்கம் ஏரி மிக முக்கியமானது. மூன்றாம் நந்திவர்மன் காலத்திலேயே அவ்வேரிக்குப் பாலாற்றிலிருந்து நீர் கொண்டு வரப்பட்டது. முற்சோழர் காலத்தில் இவ்வேரியைப் பராமரிக்கவே ஏரிவாரியப் பெருமக்கள் நியமிக்கப்பட்டனர்.[23] பையனூரில் உள்ள ஏரியைப் பராமரிக்க வணிகன் ஒருவன் 6400 காடி நெல் தானம் அளித்தான். உக்கல் என்னும் ஊரில் ஏரி தோண்டி அதைப் பராமரிக்கவே 100 காடி நெல் கொடையளிக்கப்பபட்டது.[24]

ஏரிகளிலிருந்து நீரை வெளியே எடுப்பதற்குப் பலவிதமான வழிகளைப் பின்பற்றினர் நம் முன்னோர்கள். கலிங்கு, தூம்பு, மதகு எனச் சிலகட்டுமானங்களின் மூலம் நீரை முறையாகப் பயன்படுத்தி யுள்ளனர். இன்றைய நீர் நிர்வாகம் (Water Management) எனும் அறிவியல்துறை ஆயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே நம் மக்களிடம் இருந்துள்ளது. வழுவூர் என்னும் ஊரில் நிருபதுங்களின் 6-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 871ல்) தூம்பு ஒன்று கட்டப்பட்டது.[25] தந்திவர்மனின் 14-ஆம் ஆட்சியாண்டில் (கி.மி. 810ல்) நக்கன் என்பவன் மதகு ஒன்றைக் கட்டினான்.[26] மருதாடு எனும் ஊரில் அமைந்த ஏரியில் நிருபதுங்க பல்லவனின் 12-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 877ல்) கலிங்கு, தூம்பு ஆகியவை அமைக்கப்பட்டிருந்தன.[27]

சிறு குட்டைகளை அமைத்து நீரைத் தேக்குவதும் உண்டு. கல்வெட்டுகளில் இதனைக் ''குட்டம்'' எனக் குறிப்பிட்டுள்ளனர். உத்தரமேரூரில் ''கறிகைக்குட்டம்'' எனம் ஒன்றை அமைத்துள்ளனர்.[28] கிணறுகள் தோண்டியும் நீர் பெறப்பட்டுள்ளது. பாணியகூபம் எனும் ஒரு கிணற்றை குணபதேயச் செப்பேடு கூறுகிறது. தந்திவர்ம பல்லவன் திருவெள்ளறையில் ''மாற்பிடுகு பெருங்கிணறு'' என்னும் பெயரில் ஸ்வஸ்திக வடிவில் ஒரு கிணற்றை அமைத்துள்ளான். இன்று மக்கள் அதனை நாலுமூலைக் கேணி என்று அழைக்கின்றனர்.

## அடிக்குறிப்புகள்

1. பட்டினப்பாலை
2. சிறு பஞ்சமூலம். பாடல் 64
3. (கூரம் செப்பேடு. வரி 78-81)
4. உதயேந்திரம் செப்பேடு-வடமொழிச்சாசனம்
5. கசாக்குடிச் செப்பேடு. வரி-115-117

6. புல்லூர்ச் செப்பேடு. வரி-126-128

7. திருத்தணிச் செப்பேடு நான்காம் ஏடு, பின்புறம் வரி 7-10

8. SII. VI-359

9. SII. VI-365

10. SII. VI-347 & 294

11. SII. VI-359

12. SII. VI-365

13. SII. VI-375

14. SII. VI-348 & 369

15. SII. XII-34

16. பள்ளன்கோயில் செப்பேடு-'பல்லவர் செப்பேடுகள் முப்பது'

17. Epigraphia Indica IV. p. 152

18. ARE 69-70/309

19. SII. I-53

20. SII. VI-288

21. C. Minashi. Administration and Social life under the Pallavas p. 123-124

22 SII. XII-p. 49

23. C. Minashi. Op. cit. p. 124

24. SII. III-5

25. SII. XII-62

26. ARE 75-76/209

27. SII. XII-65

28. SII. VI-370

# 3 ஸ்ரீவில்லிபுத்தூர் பராங்குசப்பேரேரி

வெ. வேதாசலம்
மதுரை.

விருதுநகர் மாவட்டத்தில் அமைந்த ஸ்ரீவில்லிப்புத்தூர்ப் பாசனயேரி இம்மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஏரிகளில் ஒன்றாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்வேரி தொடர்பான வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று ஸ்ரீவில்லிப்புத்தூர் பள்ளிகொண்டபெருமாள் கோயில் என்றழைக்கப்படும் வடபத்திர சாயி கோயில் நரசிம்மர் சன்னதியில் உள்ளது.[1]

முற்காலப் பாண்டிய மன்னர்களில் ஒருவனான இரண்டாம் இராசசிம்மனின் (கி.பி. 911-927) கல்வெட்டாக இது இருக்க வேண்டும். இக்கல்வெட்டு மூலம் பராங்குசப்புத்தூர் என்ற பெயர் ஸ்ரீவில்லிப்புத்தூர்க்கு இருந்திருப்பதை அறியமுடிகிறது. 'பராங்குசப் புத்தூர் பெருங்குளம்' என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் இக்குளத்தைப் பெருங்குளம் என்று மக்கள் இன்றும் அழைத்து வருகின்றனர். இக்குளத்தின் மடை மற்றும் வாய்க்காலைக் ஆன்மர் நாடு கிழவனான சங்கரன்மூரி அருளாக்கி என்பவன் சீர்திருத்தியுள் ளான். இதனால் ஸ்ரீவில்லிப்புத்தூர் நிர்வாகத்தினை மேற்கொண்டு வந்த மகாசபையினர், கூட்டம் ஒன்றினைக் கூட்டி அதில் ஆன்மர் நாடு கிழவ்னை நன்றியுடன் பெருமைப்படுத்தினர். வாய்க்காலும் இனிமேல் முறையே 'அருளாக்கி பெருமடை' என்றும் அழைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தனர் என்று இவ்வட்டெழுத்துக் கல்வெட்டு தெரிவிக்கிறது. ஆன்மர் நாடு கிழவன் சங்கரன்மூரி அருளாக்கி மற்றும் பாண்டியரின் பெருமையைத் தெரிவிக்கும் பாடல் ஒன்றும் இக்கல்வெட்டின் இறுதியில் இடம் பெற்றுள்ளது. பாண்டிய நாட்டை ஆண்ட கூடலர்கோனை (இராசசிம்மனை) மழை போன்ற வள்ளல் என்று இது குறிப்பிடுகின்றது. முற்காலச் சோழர் கல்வெட்டுகளில் அரசனை உரிமையோடு 'மகனார்' என்று குறிப்பிடும் வழக்கம் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் ஸ்ரீவில்லி புத்தூர் பிரமதேய சபையார் உள்நாட்டுத் தலைவனான ஆன்மர் நாடு கிழவனை 'நம்மகன்' என்று அழைத்திருக்கும் முறைமையைக் காணமுடிகிறது. நாட்டு நிர்வாகத்திலிருந்து பிரிந்து தனி நிர்வாகத்தில் பிரமதேயங்கள் இருந்தபோதிலும் நாட்டுத் தலைவர்

களுக்கும் பிரமதேய சபையார்க்கும் இடையே நிலவிய உறவை இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய
2. மாறற்கு யாண்டு உ இ
3. தனெதிர் ரு இவ்வாண்
4. டு வில்லிபுத்தூ
5, ர் ஊமாஸஸெஹெஒம் கூ
6. ட்டக்குறைவின்றிக்
7. கூடிஇருந்து நம்மகன் ஆ
8. ண்மர் நாட்டுப் புனல்வேலி
9. ஆன்மர்நாடு கிழவன் ஆஇ
10. ன சங்கரன்மூரி அருளாக்கி
11. பேரால் நம்மூர் பராங்குச
12. ப்புத்தூர் பெருங்குளம் (உம்)
13. வடக்கில் மடைஉம் இத
14 ன்னின்று கிழக்கு நோக்கி
15. ப் போஇன பெருங்காலும்
16. அருளாக்கிப் பெருமடைஉ
17. ம் அருளாக்கிப் பெருங்கா
18. லும் என்று பேரிட்டோ
19. ம் உஹா ஸஸெஹ ஒம் ஸ்வஸ்திஸ்ரீ
20. ஸ்ரீ ஆன்மர்நாடு கிழவன் அ
21. ருளாக்கி தான் மருங்குளச்
22. சங்கரன் மூரி மாண [ரரு]ம்ப
23. பாரந்தாங்கும் புனலிபக்

24. கோன் கார்மேல் குடை மாரி

25. கடலர்கோ ஹ்ஹஸ்ரீ

கி.பி. 600 க்கும் 985 க்கும் இடைப்பட்ட முற்காலப்பாண்டியர் காலத்தில் பாண்டிய நாட்டில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட உள்நாடுகளின் நிர்வாகத்தினை அரசின் சார்பாகவும் குடிகளின் சார்பாகவும் மேற்கொண்டவர்கள் இந்நாட்டுத் தலைவர்களே. இவர்களே தங்கள் நாட்டுப் பகுதிகளில் இருந்த பாசனக் குளங்களைச் சீர்த்திருத்தி வளப்படுத்தினர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தெற்கேயுள்ள ஆன்மர்நாடு என்ற நாட்டிற்குத் தலைவனாக விளங்கிய ஆன்மர்நாடு கிழவன் சங்கரன்மூரி அருளாக்கியும் தனது நாட்டிற்கு வடக்கே இருந்த ஸ்ரீவில்லிபுத்தூர் பாசனக்குளத்தில் செய்த சில பணிகளைப் பற்றியே வடபத்திரசாமி கோயில் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இவன் இருந்த புனல்வேலி என்ற ஊர் இன்றும் இராசபாளையத்திற்குத் தெற்கே அதே பெயரில் வழங்கி வருகிறது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய நாடு முதலாம் இராசராசன் ஆட்சிக்கு வந்த வேளையில் ஸ்ரீவில்லிபுத்தூர் பெருங்குளத்தின் தெற்குமடையும், அதற்குக் கிழக்கே நீர் வெளியேறும் நீர்தொட்டியும் திருத்தி அமைக்கப்பட்டன என்பதை அங்குள்ள வட்டெழுத்து மற்றும் கிரந்தக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இந்நீர்த் தொட்டியின் நடுவே மடையிலிருந்து கரைக்கு அடியில் தூம்பு வழியாக வேகமாக நீர் வெளியேறும் போது அதனைத் தடுப்பதற்கு நடப்பட்ட தடைகல்லில் இக்கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் தண்டுடன் கூடிய தாமரை மலர்மீது அமர்ந்த விநாயகரின் புடைச் சிற்பம் ஒன்று வடிக்கப்பட்டுள்ளது. மேலும் நீர்த்தொட்டியின் மேல்புறம் கஜலட்சுமியின் அழகிய சிற்பம் ஒன்றும் வடிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற உருவம் தேனி மாவட்டம் குள்ளபுரம் கண்மாயின் பழமையான நீர்த்தொட்டியிலும் காணப்படுகிறது. திருப்பரங்குன்றத்திற்கு அருகிலுள்ள நிலையூர் கண்மாயில் பாண்டியமன்னன் பராந்தக வீரநாராயணன் காலத்து

மடை நீர்த்தொட்டி ஒன்று உள்ளது. அதில் 'ஸ்ரீ வீரநாரணந்'[2] என்று கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. சோழவந்தானுக்கு[3] அருகிலுள்ள தென்கரைக் கண்மாயில் (சேந்தனேரி) பிற்காலக் பாண்டியர் காலத்து நீர்த்தொட்டி காணப்படுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட ஸ்ரீவில்லியுத்தூர் பாசனக் குளம் இராசசிம்மன், முதலாம் இராசராசன் காலத்தில் புதுபிக்கப் பட்டதோடு பிற்காலப் பாண்டியர் காலத்திலும் நன்கு பராமரிக்கப் பட்டுள்ளது. பராங்குசப்புத்தூர் என்றழைக்கப்பட்ட ஸ்ரீவில்லி புத்தூர் பெருங்குளம் 'பராங்குசப்பேரேரி' என்று பெயர் பெற்று விளங்கியதைப் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகள் பழங்காலத்தில் நீர்பாசனக் குளங்களை மன்னர்களும், நாட்டுத் தலைவர்களும் தொடர்ந்து பராமரித்து வந்தனர் என்பதையும் அவை பழுதுபட்ட போது முறைப்படி திருத்தி அமைத்தனர் என்பதையும் காட்டுகின்றன.

அடிகுறிப்புகள்

1, இ.க.ஆ.அ. 285/1965-66

2. இ.க.ஆ.அ. 528/1926

3. இ.க.ஆ.அ. 223/1941

# 4 குமரி மாவட்ட நீர்ப்பாசன கல்வெட்டுக்கள்

தே. கோபாலன்,
தொல்லியல் அலுவலர், நாகர்கோயில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போதைய அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களை உள்ளடக்கிய பண்டைய நாஞ்சில் நாடு வளமைமிக்க பகுதியாகும். நஞ்சை கொழிக்கும் நாஞ்சில் நாடு என இப்பகுதியைச் சிறப்பித்துக் கூறுவர். இம்மாவட்டத்தி லுள்ள திருவட்டாறு என்ற இடத்தைக் குறிக்கும் புறநானூற்றுப் பாடலொன்று 'வளநீர் வாட்டாறு' என இதன் வளமையைச் சிறப்பித்துக் குறிக்கிறது.

வளமையும், செழுமையும் மிக்க இம்மாவட்டத்திற்கு அடிப்படை ஆதாரமாக உள்ள நீர்ப்பாசனம் தொடர்பாக உள்ள கல்வெட்டுகள் பல நமக்கு கிடைக்கின்றன. இவற்றுள் பழமை யானது கல்குளம் வட்டம், மணவாளக் குறிச்சி கிராமம் பெரிய குளக்கரை எழுத்திட்டான் பாறையில் பொறிக்கப்பட்ட கல்வெட் டாகும். முதலாம் இராசராச சோழனின் (கி.பி. 985-1012) 27-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1012) பொறிக்கப்பட்டது. வட்டெழுத்தில் 20 வரிகளில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு தற்போது பல இடங்களில் பொறிந்து போயுள்ளது.

**கல்வெட்டு வாசகம்**

1. ஸ்ரீஸ்ரீ திருமகள் போல பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்ட
2. மை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்த[ரு]ளி வேங்கை நாடுங்கங்க பாடியு நு
3. ளம்ப பாடியு[ந்] தடிய பாடி[யு]ங் குடமலை நாடும் கொல்லமுங் கலிங்கமும் எண்
4. டிசை புகழ் த[ர] ஈழ மண்டலமும் இலட்டபாடி ஏழரை இலக்கமுந் திண்டிரல்
5. வென்றித் தண்டாற் கொண்ட[தன்]னெளில் வளர் ஊழியு ளெல்லாம் தொழுத

6. கை விளங்கும் யா[ண்டே] செ[ழிய]ரை தேசு கொள்[ஸ்ரீ] கோவி ராசராச கே[ச]ரி பன்

7. மரான ஸ்ரீ ராச ராச]தே]வற்க்கு யாண்டு [இ]ருபத் தேழாவது இராச ராச தென்

8. னாட்டுக் கடிய பட்டணத்து ஊரோமு உடயார் சரஞ்செயஞ்

9. சேரமங்கலத்துல் மஹாதேவர் பூமி தேவதானம் பள்ளிச் சந்தக் குடி[வா]ரமும்

10. இவ்வூர் பெருங்டிளத்தில் பூமிப்பள்ளி நீக்கி இயன்று ஆம்போகம் வைச்சுக் கொ

11. டுத்த பரிசாவிது இக்குளத்தில் நீருண்டு நெல் விளையு நிலந்தேவதானப் ப

12. ள்ளிச்சந்தங்கட்கு நில்மடிக்குடி நிலமும் உள்ளிட்ட நிலத்தில் இருப்ப

13. ழி . . . மழிச்செவந் நெல்ல . . நெல்போக அட்டுவித்து கு

14. டுத்த [நில]ம் இடவன்கறைகு இ . . . . . . . . . . . . . . சேர்

15. த்துக் கட்டி இக்கறையட்டு விப்பாராக அடைச்சுக் குடுத்தோம் இவ்வழி

16. வைப்பிப்பார் சான்றாலை மேமாற்றுடத்து இதன் தென்னிலஞ்சியன் வைகமைஞ்ச

17. ட்டுவிதாகவும் இப்பொன் னென்றேன்றிலை ஈ கழைஞ்சு

18. பொன் தண்டமாய் அடக்குவது இத்தண்ட கொண்ட பொன்

19. னும் இக்குளத்துக்கே செலுத்துவதாகவும் வைத்தரை கொற் .

20. றவான் விற்றானுக் கை . . . . . . . . . . . . . . . . . . .

பெரிய குளக்கரை உடைப்பெடுத்து நீர் போவதைத் தடுத்து, கரைகட்டி, அதனைத் தொடர்ந்து பராமரிப்போருக்கும் அவர்தம் சந்ததியாருக்கும் இராசராசத் தென்னாட்டுக் கடிய பட்டணத்து ஊரார் அனுபவ பாத்தியமாக (ஆம்போகம்) நிலமானியம் வழங்கியதை இக்கல்வெட்டுச் செய்தியாக தெரிவிக்கிறது. பெரிய

குளப்பாசனத்தினால் விளைச்சல் பெறும் தேவதானம், பள்ளிச் சந்தமாக விட்ட நிலங்களுக்குச் செலுத்தப்படும் 'குடிவாரம்' என்ற விளைச்சலிருந்து தீர்வையாகச் செலுத்தப்படும் ஒரு பகுதி நெல்லையும் இக்குளக்கரையைப் பராமரிப்போர் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இக்கல்வெட்டு குறிக்கிறது.

மேலும், இக்குளக்கரையை முறையாகப் பராமரிக்கத் தவறுவோர் மூன்று கழஞ்சு பொன் தண்டமாகச் செலுத்த வேண்டுமெனவும் இப்பொன்னும் இக்கரையைப் பராமரிப்பதற்காகச் செலவிட்டுக் கொள்ளலாம் எனவும் இக்கல்வெட்டு குறிக்கிறது,

குமரி மாவட்டத்திலுள்ள அணைகளில் பழமையான அணை 'பாண்டியன் அணை' ஆகும். இது முற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவ்வணையில் கி.பி. 1116-ஆம் ஆண்டில் வேணாட்டார் காலத்தில் பொறிக்கப்பட்ட தமிழ்ப் பாடல் கல்வெட்டு காணப்படுகிறது

இக்கவ்வெட்டு இன்றைய பெருஞ்சாணி அணையின் அருகில் ஓடும் பறளியாற்றுப் பாண்டியன் அணையில் பொறிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டு வாசகம்**

1. எத்திசையும் புகழ் படைத்த கொல்லம் தோன்றி
2. இருநூற்றித் தொண்ணூற்றி இரண்டாமாண்டு
3. வெற்றி செய்யும் கும்பத்தில் வியாழ நின்ற
4. விளங்கு திங்களாவணி பதினொன்றாம் தேதி
5. தத்தி விழும் பறளியாற்றணையும் தள்ளித்
6. தமிழ்பாண்டி ராஜசிங்கம் தனையும் வென்று
7. கொத்தவரும் பூஞ்சோலை நாஞ்சில் நாடும்
8. கோட்டாறும் கூபர்கோன் கொண்டநாளே

கூபக மன்னன் (வேணாட்டரசன்) நாஞ்சில் நாட்டையும் கோட்டாறையும் பிடித்து ராஜசிம்ம பாண்டியனைத் தோற்கடித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு வேணாட்டு அரசின் ஆரம்ப காலத்தை வரையறை செய்யும் போக்கு வரவாற்றாசிரியர்களிடம் பொதுவாக உள்ளது.

இப்பாண்டியன் அணை பொன்மனை கிராமத்தில் பரளியாற்றின் குறுக்கே கட்டப்பட்டது. பரளியாற்றின் நீரைப் பழையாற்றுக்குள் திசை திருப்பி விடுவதற்காக இவ்வணை கட்டப் பட்டது. இவ்வணை பயனற்றுப் போன நிலையில் இதற்குக் கீழே திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவினால் புத்தர் அணை கட்டப்பட்டது. இவ்வணை கட்டும் பணி கி.பி 1735-ல் தொடங்கப் பட்டு கி.பி. 1749-ல் முடிக்கப்பட்டது. இவ்வணையின் நீர் பழையாறு மற்றும் புத்தனாற்றுக்கு செலுத்தப்படுகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி
2. தென்குமரியின் கதை - அ. க. பெருமாள்
3. Ecology of the wetlands of Kanyakumari Dist. Dr. R. S. Lal Mohan

## காரைக்கேணியில் சமணர் சிற்பம்

மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் தே. கல்லுப்பட்டிக்கு அருகில் உள்ள காரைக்கேணி என்னும் சிற்றூரில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வில் புதிய சமணத்திருமேனி ஒன்று கண்டறியப்பட்டது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சிற்பம் நான்கு அடி உயரமும் $2\frac{1}{2}$ அடி அகலமும் கொண்டுள்ளது.

சிம்மங்கள் தாங்கி நிற்கும் பீடத்தின் மீது அர்த்த பரியங்க ஆசனத்தில் அமர்ந்துள்ள இத்திருமேனி மகாவீரர் சிற்பமாக அடையாளம் காணப்பட்டுள்ளது இத்திருமேனியின் முகம் சற்றே தேய்ந்தும், கரங்கள் இரண்டும் சிதைந்தும் காணப் படுகிறது. திண்டு ஒன்றின் மீது சாய்ந்த நிலையில் உள்ள இச்சிற்பத்தின் இரு மருங்கும் கவரிவீசும் ஆடவர் நிற்கின்றனர். சிற்பத்தின் தலைக்கு மேல் முக்குடையும், அதற்கும் மேலாக அசோகமரத்தின் வளைந்த கிளைகளும் மிக நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. கவரிவீசுவோரின் தலையில் சூட்டப்பட்டுள்ள மகுடங்கள் அவர்களை அரசர்கள் போலக் காட்டுகின்றன. பாண்டிய நாட்டிலுள்ள சமணத்திருமேனிகளில் மிக எழிலான ஒன்றாகக் கருதத்தக்கது இச்சிற்பம்.

மதுரைப்பிரிவு அலுவலர்கள் திரு. பொ. இராசேந்திரன், முனைவர் சொ. சாந்தலிங்கம் ஆகியோர் இச்சிற்பத்தைக் கண்டறிந்தனர்'

# 5 மனோமயன் ஏரியும் பராமரிப்பும்

**முனைவர். மா. செந்தில் குமரன்**
மதுரை.

நாங்குனேரி தாலுகாவில் விஜயநாராயணம் என்னும் ஊரில் மனோமயன் ஏரி என்ற நீர்ப்பிடிப்புப் பகுதி உள்ளது. மனோமயன் என்ற அதிகாரியால் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது.[1] நாங்குனேரி தாலுகாவில் உள்ள பெரிய குளங்களில் இதுவும் ஒன்றாகும். கருமனை ஆறு என்ற நதியின் மூலமாக இக்குளத்திற்கு நீர் வருகின்றது. இக்குளத்தைப் பராமரிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கல்வெட்டுகள் தரும் செய்தி வழியாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மாசித் திங்கள் பெய்த பெரு மழையில் இவ்வேரியில் மேலமடைக்கு மேற்கில் ஓர் உடைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் இக்குளத்திற்கு நீர் பாய்கிற காலில் 32 இடங்களில் உடைப்பு ஏற்படுகின்றது. இக் குளத்தின் உடைப்பு காலின் உடைப்புகளும் சிலகாலம் சீர்செய்யப்படாமலேயே இருத்தன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் நம்பி சங்கரன் வாசுதேவன் என்ற அதிகாரி இவ்வுடைப்புகளை அடைத்து இவ்வேரியினைச் சீர் செய்துள்ளான். இந்த நற்செயலைப் பாராட்டும் வகையில் விஜயநாராயணச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் அவன் சீர்செய்த ஏரிக்கரைக்கு 'வாசுதேவப் பேராறு என்றும் பெயர் கொடுத்து அவ்வதிகாரியினைப் பெருமைப்படுத்தியுள்ளனர்.[2] அந்த அதிகாரி இந்த ஏரியினைத் தொடர்ந்து பராமரிப்பதற்காக முக்காணி அரைக்காணி நிலம் தானமாக வழங்கியுள்ளான். இதைப்பற்றி கூறும் கல்வெட்டு இந்த ஏரியின் உட்பகுதியில் உள்ள கல் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னனின் 22-ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டதாகும். தற்பொழுது இக்கல் வாணியன் கல் என்று அழைக்கப்படுகிறது.

விஜயரங்க சொக்கநாதன் காலக் கல்வெட்டில் இந்த ஏரியினைப் பராமரிப்பதற்காக வேறு ஓர் உத்தி கையாளப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு வடக்குப் பகுதியில் உள்ள கலிங்கினைக் கட்டியவன் விஜயரங்க சொக்கநாத நாயக்கன் எனக்குறிப்பிடுகின்றது.[3] இம்மன்னன் ஏரிக்கரையில் இருக்கின்ற பனைமரங்களின் வரியைக் கொண்டும் குளத்து மீன் வருவாயைக் கொண்டும் இவ்வேரியினைத் தொடர்ந்து சீரமைத்து வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளான். மேலும் ஏரியிலிருந்து கிடைக்கின்ற

இந்த வருவாயை ஏரிக்கே செலவிட வேண்டும் என்றும் வேறு வகையில் செலவிடக்கூடாதென்றும் அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. ''குளத்தங் கரை பனங் கடமையும் பாசிவிலையும் குளத்திலே போட்டு வெட்டியது அல்லாமல் யிந்த பணம் பிறம்பாக செலவு செய்தால்'' என்ற கல்வெட்டுச் சொற்றொடர் மூலம் இதனை அறியலாம்.

1906-ஆம் ஆண்டு அரசு ஒரு குழுவினை அமைத்து அக்குழுவின் கீழ் இவ்வேரிப் பராமரிப்பு இருந்தது. ஏரியில் உள்ள மீன்களை ஏலம் விட்டு அதில் வரும் வருவாயை வைத்து இந்த ஏரியினைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது.

8-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட ஏரி, 12-ஆம் நூற்றாண்டில் சீர்கெட்டுப் போகின்றது. 12-ஆம் நூற்றாண்டில் அரசு வருவாய் அதிகாரி குளத்தினைச் சீர்செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து தொடர் சீரமைப்புக்காக நாயக்கர் காலத்திலும் அதனை அடுத்து வந்த பிரிட்டிஷ் அரசாங்கத்திலும் இம்முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்துள்ளது. நில வருவாய்க்கு ஆதாரமாக விளங்கும் நீர்வளம் காக்க ஏரியினைத் தொடர்ந்து பராமரித்தல் அவசியம் என்பதை இக்கல்வெட்டுகள் காட்டுகின்றன.

மனோமயன் ஏரி தற்பொழுது பெரியகுளம் என்று வழங்கப் படுகிறது. இவ்வேரியின் பரப்பு 1197 ஏக்கர். இதன்மூலம் 1821 ஏக்கர் நஞ்சைக்கும் 200 ஏக்கர் புஞ்சைக்கும் நீர் பாய்கின்றது இவ்வேரியின் கீழ் உள்ள நிலங்கள் ஒரு போகம் விளைகின்றன.

அடிக்குறிப்பு

1. தெ.இ.க. தொகுதி 14 எண் : 16
2. மேலது
3. நேரில் படிக்கப்பட்ட கல்வெட்டு

# 6

# பழங்கோயில் கல்வெட்டு காட்டும் நீர்ப்பாசனமும் வேளாண்மையும்

மு. ஆ. ப. சரஸ்வதி
முன்னாள் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவி

போளூர் வட்டம் பழங்கோயில் என்ற ஊரில் உள்ள சோழ மன்னன் பரகேசரி கல்வெட்டு ஒன்று செய்யாறு மற்றும் அதுசார்ந்த ஏரிகளால் அவ்வூரில் பத்தாம் நூற்றாண்டில் நிலவிய வேளாண் செய்திகளைச் சுருக்கமாக தருகிறது. தொண்டைமண்டலத்து வேளாண்முறையை அறிந்து கொள்ள இக்கல்வெட்டு சொல்லும் செய்தியை ஒரு சிறு துளியாக எடுத்துக்கொள்ளலாம்.

இக்கல்வெட்டு உத்தமசோழனின் ஆணையின்படி திருபழங் கோளூர் (இன்றைய பழங்கோயில்) இறைவனுக்கு வரி இல்லாத தேவதான நிலமாக ஓதியம்பள்ளம் என்ற நிலப்பகுதி (ஊர்) வழங்கப்பட்டதைக் கூறுகிறது. ஓதியம்பள்ளம் பதநாட்பாடியில் இருந்த ஒரு நிலம். இந்நிலம் இறைவனுக்குச் சர்வமானிய இறையிலியாகக் கொடுக்கப்பட்டு அதன் வருவாய் மூலம் திருநந்தா விளக்கு எரிக்கவும். ஸ்ரீபலிக்கு கைச்செக்கில் ஆட்டி எண்ணெய் கொடுக்கவும், திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டின் போது ஒற்றைச் சங்கு ஊதவும், திருவிழாவுக்குத் திருவமுது படைக்கவும் அது தொடர்பான பானை, கறிச்சட்டி, குடம், கலசம், கடாம் முதலிய திருப்பரிகலன்கள் வழங்கவும் மற்றும் வெற்றிலை, பாக்கு முதலிய படையல்கள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடையாக வழங்கப்பட்ட ஓதியம் பள்ளத்துக்கு நான்கு எல்லைகள் சொல்லப்படும்போது குறிப்பிடப்படும் நீர்ப்பாசன வசதிகளும், உரிமைகளும் நிலங்களின் பெயர்களும் அன்றைய வேளாண் செய்திகளை நமக்கு அறியத் தருகின்றன.

## ஓதியம்பள்ளத்து நான்கு எல்லைகள்

கல்வெட்டில் எல்லைகள் பின்வருமாறு சொல்லப்படுகின்றன. ''கீள்பாற்கெல்லை னந்தை தொண்டை பூண்டியார் தெற்கு நோக்கிப் போன வதிக்கு மேற்கும் தென்பாற்கெல்லை புல்லூர் வாய்க்காலுக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை நந்தப்பாடி எல்லைக்கு கிழக்கும் புல்லூர் ஏரிக்குப் பாய்ந்த ஊற்றுக் காலுக்கு கிழக்கும் வடபாற்கெல்லை செய்யாற்றுக்குத் தெற்கும்''

கிழக்கு - நந்தை தொண்டைப் பூண்டியார்வதி

தெற்கு - புல்லூர் வாய்க்கால்
மேற்கு - புல்லூர் ஏரிக்குப்பாய்ந்த ஊற்றுக்கால் மற்றும் தத்தப்பாடி ஊர் எல்லை
வடக்கு - செய்யாறு

மேற்கண்ட எல்லைகளின் வாயிலாகக் கொடை வழங்கப்பட்ட ஓதியம்பள்ளம் நிலம் நான்கு புறமும் நீரோட்டங்களையும் நீர் வசதிகளையும் பெற்றிருந்தது என்பது தெளிவாகிறது. கிழக்கு எல்லையில் உள்ள நந்தை தொண்டைப்பூண்டியார் வதி தெற்கு நோக்கி போனதாகக் குறிப்பிடப்படுகின்றது. வடக்கு செய்யாறு ஓடுவதால் அந்த ஆற்றிலிருந்து வரும் வாய்க்காலாக இதை எடுத்துக்கொள்லாம். இந்நிலத்தின் மேற்கில் புல்லூர் ஏரிக்குப் பாய்ந்த ஊற்றுக்கால் சொல்லப்படுகின்றது. மேலும் இந்த ஊற்றுக்காலிலிருந்து கொடை அளிக்கப்பட்ட நிலத்திற்குத் தண்ணீர் இறைத்துக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த ஊற்றுக்கால் இடையில் எங்கும் பிரிக்கப்படாது நேராக ஏரிக்கு நீர் வழங்குகின்ற காலாக இருக்க வேண்டும். அதனால் தான் அதன் இடையில் சிறுகால் வெட்டி நிலத்துக்கு நீர் பாய்ச்சுவது குறிக்கப்படாமல் இறைந்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஓதியம்பள்ளம் என்ற பெயரே நிலம் பள்ள மான - தாழ்வான பகுதியில் அமைத்திருந்ததைக் காட்டுவதாகும். தெற்கு எல்லையாகச் சொல்லப்படும் புல்லூர் வாய்க்கால், புல்லூர் ஏரியிலிருந்து ஓதியம்பள்ளம் நிலத்துக்கு நீர் வழங்கிய முக்கியமான வாய்க்காலாக இருக்கவேண்டும். இவ்வளவு நீர்ப்பாசன வசதியோடு உள்ள இந்நிலம் கொடையாகத் தேர்வு செய்யப்பட்டமைக்கு அரசன் நேரிடையாக பழங்கோளூர் இறைவன் மீது கொண்டிருந்த ஈடுபாடும் வ்விண்ணப்பித்துப் பெற்ற அதிகாரியின் ஈடுபாடும் காரணமாகலாம்.

காஞ்சிபுரம் இராமநாதபுரம் முதலிய மாவட்டங்களில் ஓர் ஏரி ஆற்றிலிருந்து நீர் பெறுவதும் அவ்வேரியின் மிகுதிநீர் அடுத்த ஏரிக்குப் பாய்வதும் இப்படித் தொடர்ந்து பல ஏரிகளை நிரம்பி மிஞ்சிய நீர் இறுதியில் கடலுக்குச் செல்வதும் நடைமுறை. இப்படி ஏரிகளை நிரம்பும் கால்கள் நாட்டார்கால், நரட்டுக்கால் என்று அன்றும் இன்றும் அழைக்கப்படுகின்றன.

### நீர்ப்பாசன உரிமை

இக்கல்வெட்டில் பின்வரும் சொற்றொடர்கள் உள்ளன.

'புல்லூர் ஏரிக்கு இக்காலின்[2] நீர்க்கழனிக்கு இறைந்து பாயப்பெறுவதாக'

'பழங்கோளூர் ஊற்றும் ஏரிநீரும் செய்க்கு பாய்கிற வாய்க்காலும்'

'கொடு நீரும் செம்மார் படாத'

இவை நீர் உரிமை எவ்வகையில் இருந்தது என்பதைக் காட்டுகின்றன. புல்லூருக்குப் பாயும் காலில் நிலத்துக்கு நீர் இறைத்துக் கொள்தல்,[2] பழங்கோளூர், ஊற்று நீர், ஏரி நீர், செய்க்குப் பாய்கிற வாய்க்கால் நீர் ஆகிய மூவகைப் பட்ட நீர் நிலத்தக்குப் பாய உரிமை இருந்தமை ஆகியவை சிறப்பான செய்திகளாகும். வாய்க்கால் நீர் கொடுநீர் என்று சொல்லப் படுவதோடு செம்மார்படாது என்றும் சொய்லப்படுகிறது. செம்-நேர்மை செம்பாதி-சரிபாதி செம்புலம்-செழிப்பான பூமி என்ற பொருள்கள் கல்வெட்டுச் சொல் அகராதியிலிருந்து அறியப் படுகின்றன. இங்கு செம்மார்படாதவாறு என்று சொல்லப்படுவது குறையில்லாத – பிழையில்லாத என்ற பொருளில் சொல்லப் படுவதாக கருதலாம்.

### நிலங்களின் பெயர்கள்

இக்கல்வெட்டில் கழனி, கீழைக்கல் குந்துபுலம், மேலை முடுக்கண் புலம், கீழைப் புலம், புன்சை, பாயல், ஏரிவாய் புலம், செறு ஆகிய பெயர்கள் நிலங்களுக்குச் சொல்லப்படுகின்றன. இவை நிலங்களின் தரத்தினையும் வகையினையும் காட்டுபவை. இவ்வூர் நிலம் கடிகைக் களத்துக் கோல் என்ற கோலால் அளக்கப் பட்டதும் வரி நீக்கம் (வரியிலி) வரி என்ற பதிவேட்டில் பதியப் பட்டதும் இக்கல்வெட்டால் அறியும் கூடுதல் செய்தியாகும்.

அடிகுறிப்புகள்

1. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 19 எண் 169
2. கூரம் செப்பேடு பரமேஸ்வர வாய்க்கால், பரமேஸ்வர ஏரிக்கு நீர் வழங்க வெட்டப்பட்டதையும் வாய்க்காலில் குறங்கறுத்தல் (சிறுகால் வெட்டுதல்) கூடை இறைத்தல் (இறவைப் பாசனம்) செய்தல் ஆகியவை கூடாது என்று குறிப்பிடும் இக்கல்வெட்டில் இறைக்க மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

# கோட்டரப்பட்டி கல்வெட்டு

கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர், சென்னை

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் வட்டத்தைச் சேர்ந்த கோட்டரப்பட்டி கிராமத்தில் புதிய கல்வெட்டொன்று அண்மையில் கண்டறியப்பட்டது.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவ[ந]
2. சக்கரவத்திகள் [ஸ்ரீகுல]
3. . . . க சோழதேவற்கு
4. யாண்டு ௩ காணப்பற்று கீ
5. ழ்ச் செந்தாமரைக் கண்ண நல்
6. லூர் கீழை . . . . . . . .
7. டக்கு நோக்கி போகிற வாய்க்கா
8. ல் வெட்டினான் தேவர்
9. ப்ரதாளிகளில் மண்ட
10. ய தண்ட நாயக்கர்

மூன்றாம் குலோத்துங்க சோழனின் மூன்றாவது ஆட்சி ஆண்டில் மன்னனின் பிரதானி மண்டய தண்ட நாயக்கர் என்பவர் வாய்க்கால் வெட்டியதைப் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேற்படி கல்வெட்டு திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருநெடுங்களம் திருக்கோயிலை குறிக்கும் நிலம் சார்ந்ததாக இருக்க வேண்டும். இதன் அருகிலேயே சூலம் பொறித்த கல்லும் காணப்படுகிறது. மேலும் திருவெறும்பூர் அருகே கீழக்குறிச்சி என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டிலும் 'செந்தாமரைக் கண்ணநல்லூர்' என்ற ஊர் காணப்படுவது குறிப்பிட தக்கது.

குறிப்பு

1. தகவல் அளித்தவர் திரு. சி. பால்ராஜ் கோட்டாரப்பட்டி.
2. கல்வெட்டு படியெடுக்கும் முனைப்புத்திட்டத்தின் கீழ் கல்வெட்டாய்வாளர் திருமதி அர. வசந்தகல்யாணி தலைமையில் காப்பாட்சியர் திரு. கோ அர்ச்சுனன் மற்றும் குழுவினரால் இக்கல்வெட்டு படியெடுக்கப்பட்டது.

# 7 அம்பாசமுத்திரத்துப் பூவங்குளம்

**சொ. சந்திரவாணன்**
காப்பாட்சியர், குற்றாலம்.

சங்ககாலம் தொடங்கி இன்றுவரை நீர் நிர்வாகத்தில் தனிச் செங்கோல் ஓச்சினர் தமிழர்கள் என்பதனைப் பலகாட்டுகளால் வெளிப் படுத்தலாம். சங்கப்புலவர் கபிலரின் புறப்பாடல் (புறம் 118) ஒன்று நீர் தேக்கும் ஏரியின் வரைபடத்தை விளக்கி நிற்கின்றது. எட்டாம் நாள் பிறைச்சந்திரன் போன்று ஏரி அமைத்தால் அதில் கொள்ளும் நீரின் அளவு அதிகமாயிருக்கும் என்று கூறுகின்றார். அவ்வாறே ஏரி அமைத்திருந்தான் பாரி மன்னன் என்று தம்பாடலில் கூறுகின்றார்.

இதனினும் மேலாக பஞ்ச அங்கமாக நீர் நிலைகளை அமைப்பவன் சுவர்க்கம் புகுவான் என்ற செய்தியை 'சிறுபஞ்சமூல' ஆசிரியர் காரி ஆசான் 'குளம் தொட்டு கோடு பதித்து' எனத் தொடங்கும் பாடலில் தெளிவுறுத்துகின்றார். குளம், கலிங்கு, வாய்க்கால், கழனி கிணறு என்பன ஐந்து அங்கங்களாகக் குறிப்பிடுகின்றார்.

கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளிலும் நீர்நிருவாகம் சிறந்து விளங்கிற்று என்பதை அம்பாசமுத்திரம் திருமூலநாதசுவாமி கோயிலி லுள்ள சடையன் மாறனின் கல்வெட்டொன்று தெரிவிக்சின்றது. அச்செய்தியாவது

அரையன் அனுக்கரில் பூவன்பறையன் என்பவன் 'இளங்கோய்க்குடி (அம்பாசமுத்திரம்) ஊரின் மேற்கில் புற்றும் தெற்றியுமாய்க் கிடந்த களர் நிலத்தை அவ்வூர் சபையாரிடமிருந்து விலைக்கு வாங்கி திருத்தி விளை நிலங்களும் குளமும் செய்தான். அக்குளத்தில் நீர் நிறைத்து மிகு நீரைக் கொண்டு நெல் விளைவிக்கப்பட்டது. விளைந்த நெல்லில் ஐஞ்ஞாழிக் காலால் ஒருகலனே தூணி நெல் அக்குளத்தைப் பராமரிப் பவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவனே அக்குளத்திலிருந்து நீர் இறைத்துப் பாசனத்துக்கு நீர் தரும் பணியையும் செய்தான்.

அவ்வாறு அக்குளத்திலிருந்து நீர் இறைத்து நீர் நிருவாகம் பார்த்தவன் பெயர் 'பூவன்பறையன்' என்பதாகும். இவன் பெயராலேயே இக்குளம் பெயர் பெற்றிருந்தது. இவன் மன்னனின் மெய்க்காவலர்களில் ஒருவனாக இருந்தவன். இவன் இக்குளத்து நீர் நிருவாகத்தைப் பார்த்துக் கொண்டு தன்னால் இயன்ற நன்கொடையினையும் இக்கோயிலுக்குச் செய்தான். விளக்கெரித்த தேவையான நெய்பெறும் பொருட்டு

கன்றுடன் சேர்த்து ஒரு பசுமாட்டைக் கொடுத்தான் என்று அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

பொதுவாகக் கல்வெட்டுகளில் நிலதானம் பற்றிக் கூறும் போது அதன் நான்கு எல்லைகளைக் கூறுவர். அவ்வாறு எல்லை கூறும் போது 'புற்றும் தெற்றியும் களரும் உடும்போடி ஆமை தவழும் உள்நிலம் ஒழிவின்றி . . .' என்று வழக்கமான ஒரு சொற்றொடர் வரக்காணலாம். அவை பெரும்பாலும் பயன்படா களர் நிலமாகவே இருக்கும். ஆனால் இவ்வூர்க் கல்வெட்டில் அவ்வாறிருந்த களர்நிலத்தை வாங்கிப் பண்படுத்திய செய்தி வெளிப்படையாகத் தெரிகின்றது.

அக்களர் நிலம் விளை நிலமாகக் காரணமாயிருந்த குளம் அண்மைக் காலம் வரை 'பூவங்குளம்', 'பூங்குளம்,' 'பறையங்குளம்' என்ற பெயராலேயே அழைக்கப்பட்டு வந்ததை இவ்வூரவர் இன்றும் நினைவுகூர்கின்றனர். கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு;

1. . . . கோச்சடைய மாறர்க்கு யாண்டு இரண்டு இதனெதிர் ஒன்பது முள்ளிநாட்டு ஸ்ரீஹூதெயம் இளங்கோய்க்குடி
2. ஸபையாரிடை ஊரின் மேலூர் புற்றுந்தெற்றியுமாய்க் கிடந்த பாழ் இறைகாட்டாதிதாக விலை கொண்
3. டு வசக்கி வயலும் குளமுமாக்கி இக்குளத்தால் நீர் மிகுவது வச்சு நெல்விளைச்சு அஞ்ஞாழிக் காலால்
4, மாத்தால் கலனேய் தூணி நெல்லு மிக்குளமிறைக்கு மோராளுக்குடுப்பதாக கிடைப்புறம் இது விக்கூறு வியக்கும் வாயூ-உ
5. ர்க்குக் குடுப்பதாகவும் தோரல் இந்தது அவி . . . . க் கூறும் விலை கொண்டு பறையன் வசக்கலென்று பேரிட்டு கூ
6. ழ் பெற்ற சூரியென்று பியரிட்டுக் கிடைப்புறம் வைத்தான் அரையனனுக்கரில் பூவன் பறையனேன் சந்தி
7. ராதித்ததல் நிற்பதாக வைத்தது மிக்கு நெ உரி[ய்]யூாக குடுத்த பசு ஒன்று கன்றும் குடுத்தேந் பூவம் பறைய னே[ன்] இது . . . .

# Conservation, Documentation & Digitisation in the Department of Archaeology *

8

T. S. Sridhar, I.A.S.,
Special Commissioner

## Introduction

The State Department of Archaeology was started in the year 1961 with the objectives of (a) conservation and preservation of ancient monuments in Tamil Nadu and (b) to conduet excavations at historical sites. Subsequently, its activities were expanded to include Epigraphy (copying and deciphering of stone inscriptions, printing and publishing them in book form), setting up of site museums, chemical preservation of art objects, registration of antiquities etc. This is essentially a research department and aims to disseminate knowledge about Tamil Nadu's ancient cultural heritage through a combination of fieldwork, analysis and publication.

The Depertment has 8 field offices, 14 site museums, a library at Head Office, the Government Oriental Manuscripts Libary and Research Centre at Chepauk, Chemical Laboratories at Chennai and Madurai, Photography and videography section, Printing section, besides the Institute of Epigraphy which operates from the Head Office.

Government Oriental Manuscripts Library and Research Centre, (GOML & RC) started in 1869, houses 50,180 invaluable palm leaf manuscripts, 22,134 paper manuscripts. and 26,556 rare printed books, in various languages such as Tamil,

---

* A Paper presented in the International Seminar on "Kriti Rakshna Manuscripts and India Knowledgd Systems; on 9 - 11.2.2006, Chennai."

Sanskrit, Telugu, Kannada, Marathi, Urdu, Arabic, Persian, Sinhalese etc., covering subjects like mathematics. astronomy, siddha, ayurveda, unani, veda, agama, architecture, music, sculpture, fine arts, history, grammar, literature and many others. Colonel Colin Mackenzie (1754-1821), first Surveyor General of India arrived in India in 1784. His collections paper and palm leaf manuscripts formed the basis for GOMS & RC. Historical accounts are the salient features of his collection. GOML & RC has brought out 458 publications so far in South Indian languages, Sanskrit, Urdu, Arabic Persian and Marathi languages. Many do not know that the famous South Indian Temple Inscriptions by T. N. Subramanian in three volumes are the publications of this prestigious Institution. It is a great research institution for scholars both inland and foreign, engaged in various kind of researches.

GOML & RC has published so far 30 volumes of Tamis manuscripts 53 volumes in Sanskrit and 28 volumes of Telugu, manuscripts.

**Documentation**

Access of the scholars to the manuscripts is made possiable only through proper documentation.

This can be achieved in the following steps:-

1. Bundle-wise distinct segregation
2 Writing of reference numbers along with title of each work
3. Putting up of Index cards arranged alphabetically
4. Printed catalogues of the manuscriptr giving the title alphabetically along with other columns under the heads 'author', 'subject', 'material', and 'reference number'.

Xeroxing the manuscripts and keeping them in bound volumes is another method of documentation. Scholars get copies of manuscripts through Xeroxing in GOML & RC since the year 1997.

**Digitisation of Siddha Manuscripts**

Another important part of our department is the digitiza tionof Tamil Siddha manuscripts, a joint venture with the NationalManuscripts Mission.

This noble venture took place on 14-3-2005 and ended on 25-01-2006.

Within this span of time, a total of 893 Tamil Siddha manuscript bundles have been digitized, covering 3,471 works in 1,62,209 pages.

**Digitisation Started**

Realising the need of preserving the manuscripts in modern method, the State Department of Archaeology, under the guidance and leadership of Thiru T. S Sridhar, IAS, Special Commissioner, ventured into digitizing the manuscripts of GOML&RC on 19.4.2005. This date is consipicuous in the history of this centre.

So far, we have digitized 240 bundles of Tamil manuscripts, covering 48,000 pages after proper pagination by a Tamil scholar.

**Digitisation in Epigraphy**

Epigraphy wing is an important branch of this department. It is estimated that totally 50,000 inscriptions are available throughout India in various languages and varieties. Tamil Nadu possesses 40% of them, mostly in Tamil. Digitisation started initially during November 2004 and is still ongoing. Inscriptions digitized are in variable sizes from one square feet to 1000 square feet. So far, we have digitized more than 4,175 inscriptions in 6200 frames. This has helped in easy decipherment on the computer screen thereby improving the pace of publication of epigraphical records.

**Technical Aspects in Digitisation**

While dlgitizing, care should be observed; for example, at the head of each manuscript, the particulars of the

manuscript as depicted in the corresponding printed Descriptive Catalogue should be shown. Other instituticns involved in digitisation usually ignore this method.

While digitizing, care should be taken that the title of the work is available at the beginning of each work. Also, the title of the work should be written on a flab tied up over tne bundle and this flab should also be shot.

Our endeavour of digitizing is going on quite smoothly, in the above lines, in GOML&RC, now.

Before digitization, each manuscript is smeared with lemon grass oil or other suitable oil mixed with little black powder and dried up under tender temperature. But for the black powder, the visiblity of the letters of the manuscript, after digitization will be poor.

**Merits of Digitisation**

- Easy Access & Retrieval
- Compact Storage & Net Compatible
- Eliminates wear & Tear
- Avoids Physical Handling
- Convenience in Copying & Distribution
- Free from Virus Attack
- A Mode of Preventive Conservation
- Identifies Object, Establishes Date, Determines Composition of Material, Finger Printing of Defects, helps in Signature Identification & Prevents Illegal Traffic in Art Objects

**Demerits of Digitisation**

- Prone for Illegal Copying
- The longevity of CD is often questioned

- Non Compatibility of Software
- Problems of Hacking
- Proper Lighting, Aeration, Handling & Storage
- Lack of Expertise
- A group of three persons is wanted; for cleaning, for paginating and for digitisation
- Retake necessity is a common phenomenon
- Tendency to withhold manuscrips due to protectionist Culture

**Suggestions**

- Data Storage in "Read Only" CD Format
- Developing of a Compact Disc (CD) the Longevity of which is at least
- 200 Years
- Special software needed to manipulate the digitized texts.
- Effective Fire Wall to Check Hacking
- Restricted Handling by Use of Password
- Periodical Updating of Software & Contents
- Training of Personnel and sufficient infrastructure is needed
- Further Research Necessary to Refine Digitization Process & Applications
- All Wings to adopt Principles of Authentication
- Disclosure Policy to protect copyright and ownership.

**Conclusion**

Digitisation can help enormously in preserving documents and texts in their original format without the need

for physical handling, which is prone to damage. Digitisation is not merely taking photographs by a digital camera, it is more than scanning. It is a comprehensive technology whereby rare manuscripts and art objects are preserved and made available to a wider audience through the computerized fcrmat. The advancement of technology has presented innumerable opportunities for conserving our manuscripts, which are repositories of cultural heritage Through digitization, the dissemination and promotion of standards and processes must be improved. The department has embarked on an ambitious programme to photograph and digitize all manuscripts and make them available in CD format for students and researchers So far, we have achieved cansiderable success in this endeavour. It is hoped that in the years to come all manuscripts with the department will be networked in a national knowledge library for the benefit of posterity.

## திருச்சுழியல் சமணர் சிற்பம் கண்டுபிடிப்பு

விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் படி எடுக்கும் முனைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் போது திருச்சுழியல் கிராமத்தில் குண்டாற்றங் கரையில் ஒரு சமணத்திருமேனி கண்டறியப்பட்டது. கரும்பச்சைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள இத்திருமேனி கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தாமரைப் பீடத்தின்மீது அர்த்த பரியங்க ஆசனத்தில் அமர்ந்துள்ளது இத்திரு உரு. முகம் சற்றே சிதைக்கப்பட்டுள்ளது. தலையின் பின்புறம் தீப்பிழம்புகளுடன் கூடிய ஒளிவட்டம் அணி செய்கிறது. தலைக்கு மேலாக முக்குடை அலங்கரிக்கிறது. அதன்மேல் அசோகமரத்தின் சுருண்ட கிளைகள் மிக நேர்த்தியாக வடிக்கப் பட்டுள்ளன. திருமேனியின் இருபுறமும் சாமரம் ஏந்திய இயக்கர்கள் கிரீட மகுடத்துடன் நிற்கின்றனர்.

திருச்சுழியல் தேவாரப்பாடல் பெற்ற தலமாகும். சுந்தரபாண்டியன் பள்ளிப் படைக்கோயிலும் இங்கு குண்டாற்றின் கரையில் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்பான சைவத் தலத்தில் சமணத்திருமேனியும் கிடைத்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

# துறையின் சிறப்பு நிகழ்வுகள்

## துறைச் செயலர் சிறப்புரை

தமிழ்வளர்ச்சிப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைச் செயலர் திரு. இராமையா, இ ஆ ப. அவர்கள் தொல்லியல் துறையின் தலைமை அலுவலகத்தில் 9-12-05 அன்று 'தமிழகக்கோயில் கட்டடக்கலை' என்னும் பொருளில் பட விளக்கங் களுடன் சிறப்புரை ஆற்றினார். துறையின் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் மற்றும் பிற ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சென்னைப் பல்கலைக்கழகம் அனைத்திந்தியத் தொல்லியல் கருத்தரங்கு

சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல்துறை 10-1-2006 அன்று அனைத்திந்திய அளவில் கருத்தரங்கு ஒன்றினை நடத்தியது. தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் இக்கருத்தரங்கில் தொடக்கவுரை ஆற்றித் தொடங்கி வைத்தார்கள். இத்துறையின் பதிவு அலுவலர், திரு. கி. ஸ்ரீதரன், மதுரை மாவட்டத் தொல்லியல் அலுவலர், முனைவர். சொ. சாந்தலிங்கம் நிழற்படம் எடுப்பவர் திரு. திருஞானசம்பந்தம் ஆகியோர் இக்கருத்தரங்கில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.

## மதுரையில் நிகழ்ந்த யாதவர் கல்லூரிக் கருத்தரங்கு

மதுரை இ. மா. கோ. யாதவர் பெண்கள் கல்லூரியின் வரலாற்றுத் துறையின் சார்பில் 3-2-2006 அன்று பல்கலைக்கழக மானியக்குழு நல்கையின்படி நடைபெற்ற வரலாற்றுக் கருத்தரங்கில் இத்துறையின் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு தொடக்கவுரை நிகழ்த்தினார். தமிழ் எழுத்து வளர்ச்சி மற்றும் கோயில் கட்டடக்கலை தொடர்பான இக்கருத்தரங்கில் துறையின் மதுரைப்பிரிவு அலுவலர்கள் திரு.பொ. இராசேந்திரன், முனைவர் வெ. வேதாசலம், முனைவர் சொ. சாந்த லிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வுரைகள் வழங்கினர்.

## மடிட்சியா கண்காட்சி

3-2-06 அன்று மாலை மதுரை சிறுதொழில் உற்பத்தியாளர்கள் சங்கம் (மடிட்சியா) மதுரை தமுக்கம் மைதானத்தில் நிகழ்த்திய ஐடியல்ஹோம் கண்காட்சியில் துறையின் சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். 'இந்தியக் கலாச்சார வாயில்' எனும் கருத்தமைவில் நிகழ்ந்த இக்கண்காட்சியில் நமது துறையின் அரங்கையும் திறந்து வைத்துக் கண்காட்சியைக் கண்டுகளித்தார். மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்களும் சிறப்பு ஆணையருடன் இக்கண்காட்சியைக் கண்டு களித்தார்.

## நூல் வெளியீட்டு விழா

மதுரையில் 4-2-06 அன்று காலை திருமலை மன்னர் கருத்தரங்கக் கூடத்தில் துறையின் புதிய நூல்கள் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் துறையின் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் 'மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு' என்னும் நூலை வெளியிட முதல்படிவத்தை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார். 'அழகர் கோயில்' மாணவர் ஆய்வு நூலை மாவட்ட ஆட்சியர் வெளியிட மதுரை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் இணை ஆணையர் திரு. போ. ராமராஜு பி.எஸ்.சி. பி.எல். பெற்றுக் கொண்டார். துறையின் சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்கள் முனைவர். வெ. வேதாசலம், திருமதி. அர. வசந்தகல்யாணி ஆகியோர் நூல் அறிமுகவுரை நிகழ்த்தினர். மதுரை காமராசர் பல்கலைகழகக் கலை வரலாற்றுத்துறைத் துறைப் பேராசிரியர். முனைவர். கு. சேதுராமன் அவர்கள் மதுரை பாண்டியர்களின் சிற்பக்கலை பற்றி சிறப்புரை ஆற்றினார். உதவி இயக்குநர் (பொறுப்பு) முனைவர். சொ. சாந்தலிங்கம் வரவேற்புரை நிகழ்த்த கல்வெட்டாய்வாளர் திரு. பொ. இராசேந்திரன் நன்றி கூறினார். திரளான கல்லூரி மாணவர்களும், பேராசிரியர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## குடியரசு தின காட்சி ஊர்தி

ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று சென்னை கடற்கரைச் சாலையில் ஒவ்வொரு துறையின் பணிகளை பொது மக்கள் அறிந்து கொள்ள காட்சி ஊர்திகள் செல்வது வழக்கம். இத்துறை துவங்கி 35 ஆண்டுகளுக்கு பின்னர் 2006-ம் ஆண்டில் (26-1-2006) தொல்லியல் துறை முதன்முறையாக, குடியரசு தினகாட்சி ஊர்தி (Float) ஊர்வலத்தில் பங்கேற்றது. தொல்லியல் துறையின் பணிகளும், அண்மைக்கால கண்டுபிடிப்புகளும் இதில் இடம் பெற்றன. அதனைக் காண்போமா!

மனித சமுதாயத்தின் வளர்ச்சி கற்காலத்திலிருந்து துவங்குகிறது. சென்னைக்கு அருகில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பூண்டி நீர் தேக்கத்திற்கு அருகில் குடியம் என்ற இடத்தில் கற்கால மனிதன் ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த குகை உள்ளது இக்குகையின் மாதிரி வடிவம் இதில் இடம் பெற்றது. கற்கால மனிதர்களின் மாதிரி வடிவங்களும் இதில் அமைக்கப்பட்டிருந்தன.

கற்காலத்திலிருந்து வளர்ச்சி அடைந்த பெருங்கற்கால மனித நாகரீகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அவர்கள் அமைத்த ஈமச்சின்னங்கள் பெரிதும் உதவுகின்றன கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மல்லசத்திரம் என்ற இடத்தில் காணப்படும் பெருங்கற்சின்னக் காட்சி ஊர்தியில் இடம் பெற்றது. மேலும் ஈரோடு மாவட்டத்தில் கொடுமணல் என்ற இடத்தில் இத்துறை மேற்கொண்ட பெருங்கற்சின்ன அகழாய்வு காட்சியும் இடம் பெற்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களில் ஆய்வு மேற்கொண்டு அகழ்வாராய்ச்சிகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. இது வரை 27 வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது. 2004-2005 ஆண்டுகளில் தர்மபுரி மாவட்டம் மோதூர் என்ற ஊரில் புதிய கற்கால மனிதனின் பண்பாட்டினை அறிந்து கொள்ள அகழாய்வு நடைபெற்றது. அதன் காட்சி ஊர்தியில் இடம்பெற்றது. திருவண்ணாமலை மாவட்டம் ஆண்டிப் பட்டி என்ற ஊரில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த தொல் பொருட்களின் படங்களும் இடம் பெற்றன.

அகழாய்விலிருந்து கிடைக்கும் தொல்கலைப் பொருட்களை அனைவரும் கண்டு மகிழ வரலாற்றுக் காட்சியகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இத்துறையின்கீழ் 14 காட்சியகங்கள் உள்ளன. தஞ்சாவூரில் உள்ள சோழர் கலை வரலாற்றை எடுத்துக்கூறும் இராசராசன் வரலாற்றுக் காட்சியகத்தின் காட்சி ஊர்தியில் இடம் பெற்றது. மேலும் இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேட்டின் அரசமுத்திரை ஊர்தியில் பின்புறம் பெரியவடிவில் அமைக்கப்பட்டது.

வரலாற்றுக்கு ஆதாரமாக விளங்குவது கல்வெட்டுகள் ஆகும். கோயில்கள், ஏரிகளில் தூம்புகள், தனிக்கற்கள் போன்றவற்றில் காணப்படும் கல்வெட்டுகளைப் படியெடுத்து அதில் காணப்படும் வரலாற்றுச் சிறப்புகளை இத்துறை தொகுத்து வருகிறது. கல்வெட்டுகளை படியெடுக்கும் முறையின் காட்சி விளக்கமும், செய்முறை விளக்கமும் ஊர்தியில் செய்து காண்பிக்கப்பட்டது.

மேலும் இத்துறையின் கீழ் அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு தமிழ், உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழி களில் வரலாற்றுச் சுவடிகள் 73,000-க்கும் மேற்பட்டவை உள்ளன. இவற்றை ஆய்வு செய்து நூல்களாக வெளியிடும் பணி மேற் கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இச்சுவடிகளை நுண்படக் கருவி கொண்டு பதிவு செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது. இது குறித்த செய்திப் படங்களும் இடம் பெற்றன.

நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையான கலைப் பொருட்களை ஆய்வு செய்து பதிவு செய்யும் பணியினை இத்துறை மேற்கொண்டு வருகிறது. தொன்மை கலைப்பொருட்கள் களவு போகாமலும் களவு போனால் மீண்டும் உரிமை கோருவதற்கும் பதிவுச் சான்றிதழ் பெரிதும் பயன்படுகிறது. 1974-ம் ஆண்டு துவங்கிய இப்பணியின் மூலமாக 41,458 கலைப்பொருட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய நாட்டில் இப்பணியினை மேற் கொள்வதில் தமிழ்நாடு முதலிடம் பெற்று விளங்குகிறது. இப்பணியை விளக்குவதற்கு கலையழகு மிக்க நடராசர் செப்புத் திருமேனியின் நிழற்படம் ஊர்தியில் இடம் பெற்றது.

தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்கள், கோட்டைகள், குளங்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள் போன்ற வற்றை எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் பொருட்டு

பாதுகாக்கும் பணியினையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. இத்துறையின்கீழ் 87 வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்பில் இருந்து வருகின்றன. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தென்னகத்தின் எல்லோரா என அழைக்கப்படும் கழுகுமலை வெட்டுவான்கோயில் மற்றும் தரங்கம்பாடி கோட்டை போன்றவை குறிப்பிடத்தக்கவை. அண்மையில் சீரமைக்கப்பட்ட மதுரை திருமலை நாயக்கர் அரண் மனையின் தோற்றம் ஊர்தியின் முகப்பில் இடம் பெற்றது குறிப்பிடதக்கது.

தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்பு, கலைச்சிறப்பு பண்பாடு ஆகியவற்றை அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் தொல்லியல் துறையின் குடியரசுதின ஊர்தி அனைவரையும் கவரும் வண்ணம் விளங்கியது என்றால் மிகையில்லை.

## விருதுநகர் மாவட்டக் கல்வெட்டு படியெடுப்பு முகாம் நிறைவு நிகழ்ச்சி

விருதுநகர் மாவட்டத்தில் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் கல்வெட்டு படிஎடுக்கும் முகாம் நிறைவு நாள் நிகழ்ச்சி 4.2.2006 அன்று திருவில்லிபுத்தூரில் நடைபெற்றது. துறையின் சிறப்பு ஆணையர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருக்கோயில் திருப்பணிக்குழு உறுப்பினர்களும் செய்தியாளர்களும் கலந்து கொண்டனர். திருவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் கோயில் செயல் அலுவலர் திரு. இராஜமாணிக்கம் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களைச் செய்திருந்தார். மதுரை உதவி இயக்குநர் (பொ) முனைவர். சொ. சாந்தலிங்கம், சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்கள் திரு. பொ. இராசேந்திரன், முனைவர். வெ. வேதாசலம், திருமதி. அர. வசந்தகல்யாணி, குற்றாலம் காப்பாட்சியர் திரு. சொ. சந்திரவாணன் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். நமது சிறப்பு ஆணையர், விருதுநகர் மாவட்டத்தின் முன்னாள் ஆட்சித் தலைவர் ஆவார். அவர் அன்று கண்ட கனவு இன்று அவராலேயே நனவாகியது ஒரு சிறப்பு.

# துறையின் புதிய கண்டுபிடிப்புகள்

### மாங்குளத்தில் புதிய சமணப் படுக்கைகள்

தமிழகத்தில் கிடைத்துள்ள மிகத் தொன்மையான பிராமி கல்வெட்டு உள்ள இடம் மாங்குளம் (மீனாட்சிபுரம்) ஆகும். இங்கு ஒரு சமணர் குகைத் தளம் நீண்ட நாள்களாக மண் மூடிக் கிடந்தது. அண்மையில் இதனை நேரில் ஆய்வு செய்த துறையின் சிறப்பு ஆணையர் அவர்கள் இவ்விடத்தை அகழ்ந்து பார்க்க அறிவுறுத்தினார். அதன்படி கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட பகுதி 2 திட்டப் பணியின் போது இவ்விடம் அகழ்ந்து பார்க்கப்பட்டது. இதன் மூலம் மிகப் பரந்த அளவிலான சமணப்படுக்கைகள் வெளிக்கொணரப்பட்டன. இரண்டு வரிசைகளில் மொத்தம் 34 படுக்கைகள் வெளிக்கொணரப்பட்டன. இங்கு இயற்கையான சுனையில் இருந்து நீர் வெளியேறும் வகையில் தளத்திலேயே காடி வெட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற காடி கீழவளவு சமணர் படுக்கையிலும் காணப்படுகிறது. இக்கண்டுபிடிப்பு அண்மைக் காலத்தில் நிகழ்ந்த ஒரு முக்கியக் கண்டுபிடிப்பாகும்,

### வசவப்புரம் பெருங்சின்னங்கள்

திருவைகுண்டம் வட்டம் வசவப்பபுரம் கிராமத்தில் அண்மையில் சில பெருங்கற்காலத் தொல்பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன, அவை இரும்பு வாள் (52 cm நீளம்) மண் தாங்கி குவளை, பிரிமணை ஆகியவை ஆகும். இப்பகுதியில் களஆய்வின் போது 50க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் உடைந்த நிலையில் காணப்பட்டன. இது மிகப் பெரிய தாழிக்காடு எனலாம்.

### காஞ்சியில் ஒரு சங்கப் பலகை

காஞ்சி காமாட்சியம்மன் கோயிலின் கிழக்குக் கோபுரத்தில் 13 வரிகளுடன் கூடிய கல்வொட்டொன்று உள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 15, 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதில் 'கும்பத்திருமுனியிங்கே, தமிழ் நூல் பாட வருஞ் சங்கப் பலகை யிங்கே' என்று கூறுவதுடன் மேலும் செய்திகள் கூறப்பட்டிருக் கின்றன. ஆனால் அக்கல்வெட்டின் பிற்பகுதி ஆறு வரிகள் சிதைந்துவிட்டதால் அவ்வரிகளில் கூறப்பட்டிருப்பதை அறிந்து கொள்ள இயலவில்லை. எனினும் கும்பத்திருமுனி என்று இக்கல்வெட்டுக் குறிப்பிடுவது அகத்திய முனிவரைத் தான் என்பதை தமிழுலகம் நன்கறியும். சங்கப்பலகையிங்கே என்று கூறப்பட்டி ருப்பதும் அரிய தகவலாகும். அக்கோயிலில் சங்கப்பலகை என்று கூறப்பட்ட ஒரு பலகை இருந்திருக்கிறது. அரிய தமிழ் நூல்கள் எழுதும் அறிஞர்கள் சங்கப் பலகையில் அமர்ந்துதான் தாம் எழுதிய நூலுக்குப் பொருளுரைத்து அறிஞர்களின்

ஆதரவுடனும் ஒப்புதலுடனும் அரங்கேற்றம் செய்வர் என்பது மரபு வழிச்செய்தி. காமாட்சியம்மன் கோயிலில் புலவர்கள் பலர் தங்கள் நூல்களைச் சங்கப் பலகையில் அமர்ந்து அரங்கேற்றம் செய்திருக்கின்றனர் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. சென்னைத் தொல்லியல் அலுவலர் மேற்படிப் பாடலைப் படியெடுத்துப் படித்து ஆய்வு செய்து வருகிறார்.

## மகாதேவிமங்கலத்து அம்பலம்

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புத்தூர் வட்டம் மகாதேவிமங்கலம் என்ற ஊரில் ஒரு பாழடைந்த கோயிலும் சிதைந்த கல்வெட்டுகளும் இத்துறையின் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளன. பிருதிவிமாதேவி சதுர்வேதிமங்கலம் என்று 9 - 10 ஆம் நூற்றாண்டுகளில் பெயர் பெற்றிருந்த இவ்வூரில், மதியாமிறை என்பவரால் ஒரு அம்பலம் (ஊர்ப் பொதுமண்டபம்) எடுக்கப்பட்டு அவ்வம்பலத்தில் தண்ணீர்பந்தலும், இரவு நிகழும் நிகழ்ச்சிகளைக் காண்பதற்கான வெளிச்சத்திற்காகத் தீச்சட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டன. இதற்கான செலவிற்காக சபையாரிடமிருந்து வரிச் சலுகையுடன் மேற்சொன்ன மதியாமிறை நிலம் ஒன்று வாங்கிக் கொடுத்துள்ளார். தீச்சட்டி, அக்னி இஷ்டை என்றும் மூன்று மாத காலத்திற்கானது என்றும் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. சோழர் காலத் தொடக்கத்தில் சிற்றரசனாக விளங்கிய கோபார்த்திவேந்திராதி வர்மனின் கல்வெட்டு இது. முதலாம் இராசராசனின் சகோதரன் என்றும் சில ஆய்வாளர் இவனைக் குறிப்பிடுவர்.

பரமேஸ்வரவர்ம பல்லவன் காலத்திய கூரம் செப்பேடு கூரக்தில் இதுபோல் ஒரு அம்பலம் இருந்தமையையும் அங்கு இரவில் மகாபாரதம் வாசிக்கப் பட்டதையும் குறிப்பிடுகிறது. இடைக் காலத்தில் தொண்டை மண்டலத்தில் இதுபோல நிறைய அம்பலங்கள் இருந்து மகாபாரதம், புராணங்கள், தெய்வீகக் கதைக் கூத்துகள் நடந்திருக்கின்றன என்று ஊகிக்கலாம்.

இச்சிறப்புச் செய்தி சொல்லும் கல்வெட்டினை இத்துறை முன்னாள் கல்வெட்டுப் பயிற்சி மாணவர்களும் இன்னாள் கல்வெட்டுபடிப்போருமான திரு. க. ஈஸ்வரன், திரு. கு. குமரவேல், திரு. பொ. கோ. லோகநாதன் ஆகியோர் படியெடுத்துப் படித்துள்ளனர்.

## அகத்தியர் கம்பர் பற்றிய அரிய பாடல் கல்வெட்டு

தமிழ்மொழிக்கு அணி சேர்த்த இரு புலவர்கள் அகத்தியனும் கம்பனும் ஆவர். இவர்களில் ஒருவர் பொதிய மலை சேர்ந்தும், மற்றொருவர் அரனாகிய சிவபெருமான் வாழும் கயிலையைச் சேர்ந்தும் வீடுபேறடைந்தார்கள் என்ற

பொருளில் பாடல் ஒன்று **காஞ்சி காமாட்சி** அம்மன் **கோயிலின்** கிழக்குக் கோபுரத்தில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 15-16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

பொதிய மலையைச் சென்றடைந்தவர் அகத்தியர் என்பதை அறிஞர்கள் அறிவர். அதுபோல் கயிலையை அடைந்தவர் கம்பத்தான் என்ற புலவர் என்று இதில் கூறப்பட்டுள்ளது. கம்பத்தான் என்று இப்பாடலில் கூறப்பட்டவர் கம்ப ராமாயணம் எழுதிய கம்பராக இருக்கலாம். இப்பாடலின் மூலம் அவரது இயற்பெயர் கம்பத்தான் என்ற புதிய செய்தியும் தெரிய வருகிறது.

### கல்வெட்டு வருமாறு


அரிய தமிழுக் ககத்தியன் கம்பத்தா
னிருவரே பாருலகி லெண்ணில் - ஒருவன்
திரமாம் பொதியமலை சேர்ந்தான் ஒருவ
னரன்வாழ் கயிலையடைந் தான்

என நேரிசை வெண்பாவாவில் இப்பாடல் கல்வெட்டு அமைந்துள்ளது. மேற்படி பாடல் கல்வெட்டைத் தொல்லியல் அலுவலர் படியெடுத்துப் படித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறைச் சிறப்பு ஆணையர் **திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,** அவர்கள் சார்பாக மதுரை தொல்லியல் அலுவலர் முனைவர் சொ. சாந்தலிங்கம் அவர்களால் **வெளியிடப்பெற்றது.**



மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டி
காரைக்கேணியில் அறியப்பட்ட மகாவீரர்
சிற்பம் கி.பி.10ஆம் நூற்றாண்டு




திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோட்டரப்பட்டி,
குலோத்துங்கன் கால வாய்க்கால் கல்வெட்டு.



ஸ்ரீவைகுண்டம் வட்டம் வசவப்புரம்
பெருங்கற்சின்னங்களில் கிடைத்த தொல்பொருட்கள்.




மகாதேவிமங்கலத்து அம்பலம் பற்றிய கல்வெட்டு







அண்மையில் அகழ்ந்து அறியப்பட்ட மாங்குளம் (மீனாட்சிபுரம்) தமிழ்-பிராமி குகைத்தளக் கற்படுக்கைகளும் அவற்றின் வரைபடமும்.




National Symposium on `Prevention of illicit Trafficking of Cultural. Property` 23rd - 24 th February 2006 Ms. Minja Yang Disector and UNESCO Representative, Spl.Commissioner and Director of Museums





சிறப்பு ஆணையர் மதுரை சிறுதொழில் உற்பத்தியாளர் சங்கம் (MADITSSIA) நடத்திய ஐடியல் ஹோம் கண்காட்சியில் 'இந்திய கலாசார வாயில்' கருத்தமைவு கண்காட்சியை திறந்துவைத்து உரையாற்றுதல். நாள் 03.02.2006 மதுரை.



சிறப்பு ஆணையர் மரக்காணம் அகழாய்வைத் தொடங்கி வைத்தல். நாள் 01.03.2006 மரக்காணம்.



மதுரை - திருமங்கலம் வட்டம் மேலஉறப்பனூர் கண்மாயில் 'ஸ்ரீவீரநாராயணன்', 'கலிவரமல்லன்' எனக் கல்வெட்டுள்ள மடை. கி.பி.9ஆம் நூற்றாண்டு



புதுக்கோட்டை மாவட்டம் ராஜாளிபட்டி 'குமிழி'க் கல்வெட்டு
நந்திவர்மபல்லவன் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.